# ஒவ்வொரு முஸ்லிமும் அறிய வேண்டிய 32 முக்கிய பாடங்கள்




மூலம்
அப்துல் அஸீஸ் அஷ்ஷோமர்

தமிழ் மொழியில்
ஜாஸிம் பின் தய்யான்



இஸ்லாமிய அழைப்பு மையம் - ஸு லை -
:1419 ரியாத் :11430 தொ.பே : 2414488 – 2410615 பெ..க்ஸ் 2411733

بسم الله الرحمن الرحيم

ⓒ مكتب الدعوة والإرشاد بالسلي، ١٤٢٠هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

الشومر، عبدالعزيز بن صالح

٣٢ درسا مهما يجب أن يعرفها المسلم / ترجمة جاسم بن ديان .- الرياض.

٥٢ ص ؛ ١٤×٢٢ سم

ردمك : ١ - ٣ - ٩٢٣٢ - ٩٩٦٠

النص باللغة التاميلية

١- الإسلام ٢- العقيدة الإسلامية أ- العنوان

ديوي ٢٤٠ ٢٠/٠٣٩٣

رقم الإيداع : ٢٠/٠٣٩٣

ردمك : ١ - ٣ - ٩٢٣٢ - ٩٩٦٠

# ஒவ்வொரு முஸ்லிமும் அறிய வேண்டிய 32 முக்கிய பாடங்கள்

# ٣٢ درساً مهماً يجب أن يعرفه كل مسلم

அப்துல் அஸீஸ் அல் ஷோமர்

عبدالعزيز الشومر

தமிழ் மொழியில்

ஜாசிம் பின் தய்யான்

جاسم بن ديان

தான் அனுப்பிய சகல மதங்களையும் முழுமைப்படுத்த முஹம்மது நபி (சல்) மூலம், உலகத்துக்கு அல்லாஹ் அனுப்பிய கடைசி மதமாகிய புனித இஸ்லாத்தை முஸ்லிம்கள் தெளிவாக அறிந்து அதன்படி செயல்பட இப்புத்தகம் வழிகாட்டும் என்பதே எமது அவா.

# <u>பொருளடக்கம்</u>


1. *லா இலாஹ இல் அல்லாஹ்* என்ற கலிமாவின் பொருளும் அதன் நிபந்தனைகளும்.
2. இஸ்லாத்தின் தூண்கள் ஐந்து.
3. ஈமான் எனும் இறை விசுவாசத்தின் அடிப்படைகள்
4. தவ்ஹீத் - ஏக தெய்வ கொள்கை.
5. ஷிர்க் - அல்லாஹ்வுடன் ஏனையவைகளை இணை வைத்தல்
6. நோய்கள், துன்பங்களிலிருந்து பாதுகாப்பு அல்லது நிவாரணம் நாடி மோதிரம், நூல் போன்றவைகளை அணிவது ஷிர்க்காகும்.
7. ருகா (மந்திரம் ஓதல்), தாயம், துஆக் கூடு முதலியவற்றை அணிதல்
8. மரங்கள், கற்கள் போன்றவைகளில் ஆசி தேடும் மக்கள்.
9. அல்லாஹ்வைத் தவிர ஏனையவர்களின் பெயரில் மிருகங்களை அறுத்தல்.
10. அல்லாஹ்வைத் தவிர ஏனையவைகளின் மீது நேர்க்சை வைப்பது ஷிர்க்கான செயலாகும்
11. அல்லாஹ்வைத் தவிர ஏனையவைகளிடம் பாதுகாப்புத் தேடுவது ஷிர்க்கான செயலாகும்
12. அல்லாஹ்வைத் தவிர ஏனையவைகளிடம் உதவி தேடுவதும் (இஸ்திகாதா), துஆ கேட்பதும் ஷிர்க்கான செயலாகும்
13. மரித்த ஒரு நல்ல மனிதரின் அடக்கத்தலத்தில் அல்லாஹ்வை வணங்குவதற்குத் தடை. அச்செயல் மரித்தவனை வணங்கும் செயலுக்கு சமமாகும
14. ஒரு நல்ல மனிதரின் அடக்கத்தலத்தில் எல்லை மீறி செய்யும் செயல்கள் மரித்தவரை விக்கிரகத்திற்கு சமமாக்கும்.
15. ஷிர்க்கை நோக்கி இட்டுச்செல்லும் எல்லா வழிகளையும் முஸ்தபா (சல்) தடுத்தார்கள்.
16. தண்ணீரின் வகைகளும் அசுத்தங்களும்.
17. வுது செய்யும் முறையும் காலுறைகள் மீது தடவுதலும்
18. வுது செயலுக்குரிய நிபந்தனைகள்
19. வுதுவின் அத்தியாவசியச் செயல்கள்
20. வுதுவை முறிக்கும் கருமங்கள்
21. தயம்மம் செய்தல்
22. குசுல் எனும் குளிப்பு கட்டாயமாவது எப்படி?
23. குசுல் செய்யும் முறை
24. அர்கான் அஸ் சலாஹ் - தொழுகையின் அத்தியாவசிய அம்சங்கள்
25. தொழுகையின் நிபந்தனைகள்
26. தொழுகையின் வாஜிபான அம்சங்கள்
27. தொழுகையின் சுன்னத்தான அம்சங்கள்
28. தொழுகையை முறிக்கும் செயல்கள்
29. மறதிக்காக செய்யும் சஜதா (சஜதா ஸஹு)
30. சகாத் எனும் செல்வ வரி
31. ஒரு முஸ்லிமின் மரணக்கிரியைகள் செய்யும் முறை
32. முஸ்லிம் மையத்துக்கு தொழுவது எப்படி?

## முதலாவது பாடம்

### *லா இலாஹ இல் அல்லாஹ்* என்ற கலிமாவின் பொருளும் அதன் நிபந்தனைகளும்.

**இறை நம்பிக்கையை சாட்சி கூறுவதின் உண்மை அர்த்தம்.**

*லா இலாஹ இல் அல்லாஹ்* என்று இறை நம்பிக்கையை சாட்சி கூறுவதில் இரண்டு அம்சங்கள் அடங்கியுள்ளன. அவையாவன மறுப்பதும், உறுதிப்படுத்துவதுமாகும்.

முதலாவது:

எல்லாப் புகழுக்கும் உரிய அல்லாஹ்வுக்கன்றி வேறு யாருக்கும் அல்லது வேறு எதற்கும் தெய்வீகத் தன்மை கிடையாது என்று இறை நம்பிக்கையை சாட்சி கூறும் ஷஹாதா மறுக்கிறது. அல்லாஹ்வை அன்றி ஏனையவைகள் மலக்குகள், நபிமார்கள், ஏனைய மனித இனங்கள், சிலைகள், உலகின் அரசியல் சக்திகள் ஆகிய எவையும் தெய்வங்களுமல்ல, அவற்றிற்கு தெய்வீகத் தன்மையும் கிடையாது. இவை அனைத்தும் தெய்வ உருவில் இன்றும் உலகில் இருப்பதை இறை நம்பிக்கை சாட்சியம் மறுக்கவில்லை. மாறாக மனிதனால் அவற்றிற்கு அளிக்கப்பட்ட தெய்வீகத் தன்மையை இந்த ஷஹாதா மறுக்கிறது.

இரண்டாவது:

*லா இலாஹ இல் அல்லாஹ்* என்ற சாட்சியம், தெய்வீகத்தன்மை அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டென்பதை உறுதிப்படுத்துகிறது. அடியானாகிய மனிதன் உண்மை இறைவனாகிய அல்லாஹ்வை மாத்திரமே விசுவாசிக்க வேண்டும் என்பதோடு அவனுக்கு மாத்திரமே வணக்க வழிபாடுகளை செய்ய வேண்டும் என்பதையும் இந்த ஷஹாதா உறுதிப்படுத்துகிறது.

*முஹம்மத் அர் ரசூல் அல்லாஹ்* என்பதன் பொருள்:

'யா அல்லாஹ்! முஹம்மத் (சல்) அவர்கள் உன்னுடைய உண்மைத்தூதர் என்று சாட்சி கூறுகிறேன்' என்று உள்ளத்தில் உறுதி கொண்டு நாவால் மொழியும்போது, அல்லாஹ்வின் கட்டளைக்குப் பின் மனிதர்கள் அனைவரும் பின்பற்றுவதற்குரியவர் அல்லாஹ்வின் கடைசித் தூதர் முஹம்மத் (சல்) அவர்களை தவிர வேறு யாரும் இல்லை என இந்த சாட்சியம் உறுதிப்படுத்துகிறது.

குர்ஆனில் பின்வருமாறு அல்லாஹ் கூறுகிறான்:

*'உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முஹம்மது (சல்) தகப்பனாக இருக்கவில்லை: எனினும் அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு (கடைசி) முத்திரையாகவும் (இறுதி நபியாகவும்) இருக்கிறார்'.* 33:40

*'அன்றியும் (நம்முடைய) தூதர் உங்களுக்கு எதை கொடுத்தாரோ அதை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை விட்டும் உங்களை தடுத்தாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்.'* 59:7

*'(நபியே! மனிதர்களிடம்) கூறுவீராக. நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னை நீங்கள் பின்பற்றுங்கள்.'* 3:31

எனவே அல்லாஹ்வின் குர்ஆனுக்கும் நபி(சல்) அவர்களின் சுன்னாவுக்கும் (சட்டங்கள், கட்டளைகள், வணக்க வழிபாடு முறைகள், கூற்றுக்கள்) பொறுத்தமானவையாக, ஏனைய மனிதர்களின் கூற்றுக்கள் இருந்தால் இவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அவற்றுக்கு முறனானக இருந்தால் நிராகரிக்க வேண்டும்.

லா இலாஹ இல் அல்லாஹ் என்ற கலிமாவின் நிபந்தனைகள்.

1. அறிவு: வணக்கத்துக்கு உரிய ஒரே இறைவன் அல்லாஹ் ஒருவனே என்பதையும் அவனுக்கே சகல வணக்க வழிபாடுகளும் உரியன என்பதையும் அறிவதும், அல்லாஹ்வையன்றி வணங்கப்படும் ஏனையவைகள் நன்மையோ தீமையோ செய்ய எவ்வித சக்தியுமற்றவை என்பதனால் அப்படிப்பட்ட பிழையான வழிபாடுகளை விட்டும் நீங்க வேண்டும் என்ற அறிவு.
2. அல்லாஹ்வின் மீது எல்லா சந்தேகங்களையும் விட்டும் நீங்கிய உறுதி.
3. கலிமாவின் எல்லா நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ளுதல்.
4. அல்லாஹ் மாத்திரமே ஒரே இறைவன் என்றும் முஹம்மத் (சல்) அவர்கள் அல்லாஹ்வின் கடைசி நபியும், தூதரும் ஆவார்கள் என்பதையும் மனமுவந்து விரும்பி ஏற்றுக் கொள்ளுதல்.
5. கலிமாவின் அவசியங்களை நேர்மையுடன் நிறைவேற்றல்.
6. சகல வணக்க வழிபாடுகளையும் தூய்மையுடன் அல்லாஹ்வுக்கு மாத்திரம் நிறைவேற்றுதல்.
7. உயர்தியாகிய அல்லாஹ்விடம் பற்றுதல், அவனுடைய தூதரிடம் பற்றுதல், அவனுக்கு வணக்கம் புரியும் உண்மை அடியார்களிடம் பற்றுதல், என்பதன் மூலம் எல்லா முஸ்லீம்கள் மீதும் பற்றுதல் வைத்தல்.

இறுதியாக, அல்லாஹ் ஏவியவைகளை செய்வதிலும், அவன் தடுத்தவைகளை விட்டும் நீங்குவதன் மூலமும், அவனுடைய கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். அவன் மீது பற்றுதல் வைப்பதன் மூலம், அவனுடைய தண்டனைகளுக்கு பயப்படுவதன் மூலம், அவனிடம் பரிசு பெறும் ஆவலுடன் அவனுடைய மன்னிப்பை தேடுவதன் மூலம், அவனுடைய கடைசி நபியாகிய முஹம்மத் (சல்) அவர்களை பின்பற்றுவதன் மூலம், அல்லாஹ்வை அடிபணிய முடியும். கடைசி தூதராகிய முஹம்மத் (சல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீயா, அதற்கு முன் வந்த சகல சட்ட திட்டங்களையும் வணக்க வழிபாடுகளையும் நீக்கியதுடன் அவை அனைத்திலும் உள்ள சிறந்த அம்சங்கள் எல்லாவற்றை உள்ளடக்கியதாகும்.

பாடம் - 2

## இஸ்லாத்தின் தூண்கள் ஐந்து

1. வணக்கத்திற்கு உரிய இறைவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் (சல்) அவர்கள் இறுதித் தூதரும் நபிமார்களின் முத்திரையாகவும் வந்தார்கள் என்றும் உள்ளத்தில் விசுவாசம் கொண்டு நாவால் மொழிதல்.
2. ஐங்காலத் தொழுகையை தவறாது நிறைவேற்றல்.
3. சகாத் என்னும் ஏழை வரியை வருடம் தோரும் செலுத்தல்.
4. ரமதான் மாதம் நோம்பு நோற்றல்.
5. வாழ்கையில் ஒரு முறையேனும் (வசதி இருப்பின்) ஹஜ் யாத்திரை செய்தல்.

---

பாடம் - 3

## ஈமான் என்னும் இறை விசுவாசத்தின் அடிப்படைகள்

பின்வரும் விஷயங்களில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

1. அல்லாஹ்விடம்.
2. அவனுடைய மலக்குகளில்.
3. அவன் இறக்கிய வேதங்களில்,
4. அவன் அனுப்பிய திருத் தூதர்களில்,
5. தீர்ப்பு கூறப்படும் மறுமை நாளில்,
6. அல் கத்ர் எனப்படும் விதியில். (அல்லாஹ் ஏவிய அனைத்தும் நிறைவேறும் என நம்புதல்)

பாடம் - 4

## தவ்ஹீத் எனும் ஏக தெய்வக் கொள்கை.

தவ்ஹீத் எனும் ஏக தெய்வக் கொள்கை மூன்று அம்சங்களைக் கொண்டது.

1. தவ்ஹீத் அர் ருபூபிய்யா - அல்லாஹ்வின் ஆதிபத்தியத்தில் ஏகத்துவம். அகிலங்களுக்கெல்லாம் அதிபதி ஒருவனே என்றும் அவனே அதனைப் படைத்தவன், நிர்வகிப்பவன், பரிபாலிப்பவன், உணவளிப்பவன், பாதுகாவலன் என்றும் அவன்தான் அல்லாஹ் என்ற உறுதியான நம்பிக்கை.
2. தவ்ஹீத் அல் உலூஹிய்யா - அல்லாஹ்வின் வணக்கத்தில் ஏகத்துவம். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்ற விசுவாசம். உதாரணமாக வணக்கங்கள், வேண்டுதல் செய்தல், கண்ணுக்கு புலப்படாதவைகளிடம் உதவி தேடல், சத்தியம் செய்தல், குர்பான் கொடுத்தல், ஏழைகளுக்கு தானம் கொடுத்தல், நோன்பு நோற்றல், ஹஜ் யாத்திரை, போன்ற சகலவற்றையும் அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்தல்.
3. தவ்ஹீத் ஈ அஸ்மா வ அல் சிபா - அவனுடைய அழகிய திரு நாமங்களிலும் தன்மைகளிலும் ஏகத்துவம்.

பின்வரும் அம்சங்களில் நம்பிக்கை வைத்தல்:

- அல்லாஹ்வோ அல்லது அவனுடைய தூதர் (சல்) அவர்களோ குறிப்பிட்ட அல்லாஹ்வின் திருநாமங்கள் அல்லது தன்மைகளைத் தவிர வேறு எவற்றையும் அல்லாஹ்வை குறிப்பிட உபயோகிக்கக் கூடாது.
- அல்லாஹ்வின் திருநாமங்கள் அல்லது தன்மைகளைக் கொண்டு மற்ற படைப்பினங்களை குறிப்பிடக் கூடாது. (உதாரணம்: அல் கரீம் என ஒருவருக்குப் பெயரிடுவது.)
- அல்லாஹ்வுடைய குர்ஆனும் அவனுடைய திருத் தூதர் முஹம்மது (சல்) அவர்களும் அல்லாஹ்வைப் பற்றிக் கூறிய தன்மைகளை உறுதிப்படுத்தல். அவற்றை எல்லளவேனும் மாற்றாமலும், அவற்றை முற்றாகப் புறக்கணிக்காமலும், புது அர்த்தங்களை புகுத்தாமலும், படைப்பினங்களை சுட்டிக்காட்டும் தன்மைகளை கொடுக்காமலும் இருக்க வேண்டும். உதாரணம் அர் ரஹ்மான் அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான். 20:5

  'மிக உயர்தியாகியவன் (அல்லாஹ்) ஏழு வானங்களுக்கு அப்பால் தன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று)

விட்டான். துல் ஹஜ் மாதம் 9ம் அரபா தினத்திலும் இரவின் கடைசி மூன்றாவது பாகத்திலும் தாழ்ந்த வானத்திற்கு இறங்குகிறான்' என நபி (சல்) அவர்கள் மொழிந்தார்கள். தன் உருவில் அன்றி அறிவின் மூலம் எங்களுக்கு மிக அருகில் அல்லாஹ் நெருங்கி இருக்கிறான் (பி தாதிஹி). இதன்படி அல்லாஹ் எங்குமிருக்கிறான் என்ற சில மனிதரின் கருத்து பிழையாகிறது. உயர்ந்த வாணத்துக்கப்பால் தன் அரியாசனத்தில் இருப்பதாக அல்லாஹ் கூறுகிறான்.

அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவனே யாவற்றையும் செவியேற்கிறவன். பார்க்கிறவன். 42:11 குர்ஆனின் இத்திரு வசனங்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் பார்க்கவும் எதனையும் கேட்கவும் சக்தி இருப்பதை குறிப்பினும் இவை படைப்பினங்களின் தன்மைகளில் எவற்றையும் குறிப்பிடவில்லை.

அதே போன்று அவன் (அஸ்ஸ வ ஜல்) என் இரு கரங்க ளால் படைத்ததற்கு.. எனக்கூறுகிறான். குர்ஆன் - 38:75. அல்லாஹ்வின் கரம் அவர்களின் கரங்களுக்கு மேல் இருக்கிறது. குர்ஆன் - 48:10.

அல்லாஹ்வுக்கு இரு கரங்கள் இருப்பதாக இவ்வசனங்கள் குறிப்பிடினும் இவை எதற்கும் சமமாகாது. உண்மை விசுவாசிகளின் மாத்திரம் அன்றி அல்லாஹ்வின் நபிமார் களாகிய நூஹு முதல் இப்ராஹிம், மூஸா, ஈசா உட்பட கடைசி நபி முஹம்மது(சல்) அவர்கள் அனைவரது நம்பிக்கையும் இவையாகும்.

ஏக இறைவன் கொள்கையின் இந்த மூன்று அம்சங்களும் லா இலாஹ இல் இல்லாஹ் - வணக்கத்துக்குறிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை - என்ற பொருளில் அடங்குகிறது.

வுஜூப் அல் இஜாபா ஆகிய அல்லாஹ்வின் திருத்தூதர் முஹம்மத் (சல்) அவர்களைப் பின்பற்றுதல் தவ்ஹீத் அல் உலூஹிய்யாவின் ஒரு அம்சமாகும்.

முஹம்மத் (சல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத் தூதர் ஆவார்கள் எனக் கூறும் சாட்சியத்தில் அல்லாஹ்வின் குர்ஆனுக்கு பிறகு பின்பற்றுவதற்குரியவர் அல்லாஹ்வின் திருத்தூதர் முஹம்மத் (சல்) அவர்களைத் தவிர வேறு யாருமில்லை என்ற பொருளும் அடங்கும்.
குர்ஆன் வசனங்கள் 59.7 மற்றும் 3.31 நோக்கவும்.

பாடம் - 5

## ஷிர்க் - அல்லாஹ்வுடன் ஏனையவைகளை இணை வைத்தல்

ஷிர்க் எனும் செயல் இரண்டு வகைப்படும்.

1. பெரிய ஷிர்க்
2. சிறிய ஷிர்க்

1. பெரிய ஷிர்க் (அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்)

இதன் காரணத்தால் நற் செயல்களில் தோல்வியும் என்றென்றும் நரக நெருப்பில் இருக்க வேண்டிய பயங்கர நிலையும் ஏற்படும் எனக் குர்ஆன் கூறுகிறது.

*'இன்னும் அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணை வைத்திருந்தால் அவர்கள் செய்துக்கொண்டிருந்த (நன்மையான)வைகள் (யாவும்) அவர்களை விட்டு அழிந்துவிடும்.'* குர்ஆன் 6.88

*'இணை வைத்துக்கொண்டிருப்போருக்கு-இவர்கள் தங்களுக்குத் தாங்களே நிராகரிப்பைக் கொண்டு சாட்சி கூறிக் கொள்பவர் களாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுடைய பள்ளிகளை இவர்கள் நிர்வாகம் செய்ய எவ்வித உரிமையுமில்லை. அத்தகையோர் - அவர்களுடைய செயல்கள் அழிந்து விட்டன. இன்னும் அவர்கள் (நரக) நெருப்பில் நிரந்தரமாக (த்தங்கி) இருப்பவர்கள்.'* குர்ஆன் 17.9

*'நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கமாட்டான். மேலும் இதல்லாத (குற்றத்)தை தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். இன்னும் யார் அல்லாஹ்வுக்கு இணைவைப்பாரோ அவர் திட்டமாக வெகுதூரமான வழிகேடாக வழி கெட்டுவிட்டார்.'* குர்ஆன் 4.116

*'நிச்சயமாக எவர் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறாரோ அவர் மீது திட்டமாக அல்லாஹ் சுவனபதியை தடுத்துவிடுகின்றான். மேலும் அவர் தங்குமிடம் நரகம்தான். இன்னும் (இத்தகைய) அநியாயக் காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்வோர் இல்லை.'* 5.72.

இக்குர்ஆன் வசனங்களின்படி ஷிர்க்கான காரியங்களில் ஈடுபட்ட நிலையில் ஒருவர் மரிக்க நேரிட்டால் அவருக்கு அல்லாஹ்வின் மன்னிப்பு கிடைக்காது என்பது மாத்திரமின்றி அவர் ஒரு போதும சுவர்க்கத்தில் அனுமதிக்கப்பட மாட்டார் என தெளிவாகிறது.

இறந்த மனிதர்களிடம் உதவி கோருவது, சிலை வணக்கத்தின் மூலம் உதவி, நிவாரணம் முதலயவை தேடுவது, அவைகளுக்கு நேர்ச்சை வைப்பது, காணிக்கை வைப்பது, அவைகளுக்கு பணிவு காட்டும் முறையில் பிராணிகளை அறுத்துப் பலியிடுவது போன்ற காரியங்கள் பெரிய ஷிர்க்கில் அடங்கும்.

2. சிறிய ஷிர்க்
(அல்லாஹ்வுக்கு சிறிய அளவிலான இணை வைத்தல்)

குர்ஆன் வசனங்களும் நபியவர்களின் சுன்னாவும் சிறிய ஷிர்க்கைப் பற்றி விளக்குகின்றன. அவற்றின் அடிப்படையில் மற்றவர்களை ஏமாற்றப் போலிவேஷம் போடுவது, அல்லாஹ்வையன்றி ஏனையவை களின் மீது சத்தியம் செய்வது, அல்லாஹ்வும் நாடுவான் மற்றவர் களும் நாடுவார்கள் எனக்கூறுவது போன்ற காரியஙகள் சிறிய ஷிர்க்கில் அடங்கும்.

பின்வரும் சில ஹதீஸ்கள் இவற்றை மேலும் விளக்குகின்றன.

*'சிறிய ஷிர்க்கைப்பற்றி உங்களுக்காக பயப்படுகிறேன்'* என ஒரு முறை நபி(சல்) அவர்கள் கூறினார்கள். சிறிய ஷிர்க் என்றால் என்ன என்று வினவியபோது *'அவை உருவம்மாறிய ஷிர்க்காகும்'* எனக்கூறியதாக மஹ்மூத் இப்னு லபீத் அல் அன்சாரி (ரலி) தெறிவிக்கிறார்கள். அறிவிப்பவர் இமாம் அஹ்மத், அல் தப்ரானி, பய்ஹகி ஆகியோர்.

*அல்லாஹ்வைத் தவிர வேறெவற்றின் மீதும் சத்தியம் செய்பவர் ஒரு முஷ்ரிக் எனக் கருதப்படுவார்* என்று இப்னு உமர்(ரலி) தெரிவித்ததாக இமாம் அஹ்மத் அறிவிக்கிறார்கள்.

*அல்லாஹ்வைத் தவிர வேறெவற்றின் மீதும் சத்தியம் செய்பவர் குப்(f)ரில் அல்லது ஷிர்க்கில் விழுந்து விட்டார்,* என இப்னு உமர் (ரலி) தெரிவித்தார்கள். அறிவிப்பவர் அபு தாவுத், திர்மிதி.

அல்லாஹ்வும் நாடுவான், மற்றவரும் நாடுவார் எனக் கூறாதீர்கள். அதற்குப் பதிலாக அல்லாஹ் நாடுவான் அதன் பின்பு மற்றவர் அதனை நாடுவார் எனக் கூறுங்கள் என்று ஹுதைபா இப்னு அல் யமன் (ரலி) தெரிவித்தார்கள் - அறிவிப்பவர் அபு தாவுத்.

இத்தகை சிறிய ஷிர்க்குகள் நரக நெருப்பில் ஒருவரை வீழ்த்தக் கூடிய இணை வைக்கும் பெரிய பாவங்களாகாதெனினும் ஒரு முஸ்லீமின் உள்ளத்தில் இருக்க வேண்டிய தவ்ஹீத் எனும் ஏக தெய்வக் கொள்கை இன்னும் முழுமை பெறவில்லை என்பதையே காட்டுகின்றன.

## வேஷம் மாறிய ஷிர்க்குகள்.

வேஷம் மாறிய ஷிர்க்குகள் பெறிய ஷிர்க், சிறிய சிர்க் ஆகிய இரண்டிலும் அடங்கும். முஸ்லீம்களுக்கு மத்தியில் இருக்கையில் தாங்களும் முஸ்லீங்கள் என நடிக்கும் இறை நம்பிக்கையற்ற முனாபிக்குகள் விஷயத்தில் இது பெரிய ஷிர்க்காகும்.

பிற மனிதர்களுக்கு காட்டும் நோக்கத்தில் நற்காரியங்களை செய்வதும், அவற்றை அழகு படுத்துவதும், ரியா என அழைக்கப்படும் வேஷம் மாறிய ஷிர்க்காகும் என மஹ்மூத் இப்னு லபீத் அல் அன்சாரி தெறிவிக்கும் பின்வரும் ஹதிஸ் குறிப்பிடுகிறது.

*'மஸீஹ் அத்தஜ்ஜாலை விட உங்களுக்கு பெரிய தீங்கை விளைவிக்கக் கூடியதென நான் பயப்படும் ஒன்றைப் பற்றிக் கூறவா?'* என நபி (சல்) அவர்கள் வினவினார்கள். ஆம் யா ரசூலல்லாஹ்! என மற்றவர்கள் பதிலளிக்க, *'அது தான் பிற மனிதர்கள் பார்க்கிறார்கள் என்ற காரணத்துக்காக ஒருவர் எழுந்து தொழுவதும் அதனை அழகுபடுத்துவதுமாகிய வேஷம் மாறிய ஷிர்க்காகும்.'* என நபி (சல்) விளக்கினார்கள். அபி சஈத் அல் குத்ரி (ரலி) இதனை தெரிவித்ததாக இமாம் அஹ்மத் தன் முஸ்னத் தொகுப்பில் அறிவிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆபத்துக்களினின்றும் தூரவிலகி வெற்றிபெற அல்லாஹ் எங்களுக்கு உதவி செய்வானாக.

பாடம் - 6

### <u>நோய்கள், துன்பங்களில் இருந்து பாதுகாப்பு அல்லது நிவாரணம் நாடி மோதிரம், நூல் போன்றவைகளை அணிவது ஷிர்க்காகும்.</u>

*'அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைக்கின்றவற்றை பார்த்தீர்களா? அல்லாஹ் எனக்கு ஏதேனும் இடரை (உண்டாக்க) நாடினால் அவைகள் அவனது (நாட்டத்தால் எனக்கு ஏற்பட்ட) இடரை நீக்கிவிடக் கூடியவையா? அல்லது ஏதேனும் ஓர் அருளை அவன் நாடினால் அவனுடைய அருளை அவை தடுத்துவிடக் கூடியவையா? என்று நீர் கேட்பீராக. அல்லாஹ் எனக்குப் போதுமானவன். (சகல காரியங்களையும் அவனிடம் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்பவர்கள் அவன்மீது முழுமையாக நம்பிக்கை வைப்பார்கள் என்று கூறுவீராக.'* குர்ஆன்:39:38

பித்தளை மோதிரமொன்றை அணிந்திருந்த ஒருவரிடம் அது என்ன என்று நபி (சல்) அவர்கள் வினவினார்கள். முதிமையின் பலஹீனத்திலிருந்து நிவாரணம் பெறுவதற்கு என அந்த மனிதர் பதிலளித்தார். *அதனை கழற்றுங்கள். அது உங்கள் பலஹீனத்தை மேலும அதிகரிக்கத்தான் உதவும். அதனை அணிந்திருக்கையில் உங்ளுக்கு மரணம் ஏற்பட்டால் ஒரு போதும் சித்தி பெறமாட்டீர்கள்,* எனக் கூறியதாக இம்ரான் பின் ஹுசெய்ன் தெரிவிக்கிறார்கள். ஆதாரம் அஹ்மத் (இப்னு ஹம்பல்).

நபி(சல்) அவர்கள் வரை அறிவிப்பாளர் அனைவரையும் குறிப்பிடும் மர்பு ஹதீசில் *"எவராயினும் ஒரு துஆ கூட்டை அல்லது தாயத்தை அணிந்துக்கொண்டால் தன் நாட்டத்தை அல்லாஹ் பூர்த்தி செய்வதை அவர் ஒருபோதும் காணமாட்டார். எவரேனும் ஒரு கடல் சங்கை தொங்கவிட்டுக் கொண்டால் அவர் ஒரு போதும் ஓய்வும் சாந்தியும் பெறமாட்டார்"* என நபி (சல்) கூறியதாக உக்பா பின் ஆமிர் தெரிவித்தார். ஆதாரம் அஹ்மத் (இப்னு ஹம்பல்).

நபி(சல்) அவர்களின் இன்னுமொரு ஹதீஸின்படி, "*யாரேனும் ஒரு தாயத்தை அணிந்துக் கொண்டால், அவர் ஒரு ஷிர்க்கான காரியத்தை செய்துவிட்டார்*", என்று கூறியிருக்கிறார்கள்.

கையில் (மந்திரம் ஓதிய) ஒரு நூலை கட்டிக் கொண்டிருந்த ஒரு மனிதரைக் கண்ட ஹுதைபா (ரலி) அவர்கள் அதனை வெட்டியெருந்து 12:106 குர்ஆன் ஆயத்தை ஓதிக் காட்டியதாக இப்னு அபி ஹாதிம் அறிவிக்கிறார்கள்.

## இப்பாடம் காட்டும் முக்கிய அம்சங்கள்:

- பாதுகாப்பு நாடி மோதிரம், நூல் போன்றவற்றை அணிவது கடுமையாக தடுக்கப்பட்டுள்ளது.
- நபித் தோழர்களாயினும் இவற்றை அணிந்திருக்கையில் மரணிக்க நேரிட்டால் மறுமையில் சித்தி பெற மாட்டார்கள். சிறிய ஷிர்க், பெரிய ஷிர்க்கை விடக்கொடியது என்ற நபித் தோழர்களின் கூற்று இதனை உறுதிப்படுதிப்படுத்துகிறது.
- பிழைசெய்தால் அறியாமையை காரணம் காட்டமுடியாது.
- பாதுகாப்புத் தேடி அணியும் எதுவும் இவ்வுலக வாழ்வில் உதவி செய்யாது. மாறாக அவற்றால் தீமையே ஏற்படும்
- நபி (சல்) அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை கடுமையாக கண்டித்த முறையும் அவற்றை தடை செய்ததும்.

- யாரேனும் பாதுகாப்பு நாடி ஏதேனும் ஒன்றை அணிந்துக் கொண்டால் அந்த மனிதர் அதன் பொறுப்பில் மாத்திரம் விடப்படுவார் என்ற எச்சரிக்கை.
- தாயத்தை கட்டிக்கொணடவர் ஷிர்க்கான காரியமொன்றை செய்து விட்டார் என்ற கண்டனம்.
- சகாபாக்கள் பெரிய ஷிர்க்கை சுட்டிக்காட்டும் குர்ஆன் வசனத்தை ஓதிக்காட்டி சிறிய ஷிர்க்கை தடை செய்தார்கள் என்பதை ஹுதைபா (ரலி) வின் செய்கை சுட்டிக்காட்டுகிறது. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும் சூரா பகராவில் 165வது வசனத்தை ஓதிக்காட்டி இக்காரியத்தை செய்தார்கள்.
- நோய்கள், பிறரின் கண்திருஷ்டிப் படுவது போன்றவற்றிலிருந்து தாயம், துஆக்கூடு முதலியவைகளின் உதவியைக் கொண்டு பாதுகாப்புத் தேடுவது ஷிர்க்கில் சார்ந்ததாகும்.
- தாயம், துஆ கூடு முதலியவற்றில் பாதுகாப்புத் தேடுபவர்கள் தாங்கள் தேடிய நிவாரணம் பெறக்கூடாது, கடல் சங்கை தொங்கவிட்டுக் கொண்டவர்கள் சாந்தி பெறமாற்றார்கள் என்ற நபி (சல்) அவர்களின் சாபம். அதாவது, அல்லாஹ் அவர்களை நிராகரித்துவிட்டான் என்ற அறிக்கை.

<u>பாடம் - 7</u>

## <u>ருகா(மந்திரம் ஓதல்), தாயம், துஆக் கூடு முதலிவைகளை அணிதல்</u>

அல்லாஹ்வின் தூதருடன்(சல்) ஒரு பயணத்தில் சென்ற போது வில்கயிறு அல்லது வேறெவற்றையும் கொண்டு ஒட்டகங்களின் கழுத்தில் கட்டப்படும் மாலைகள் யாவும் வெட்டியெறியப்பட வேண்டும் என அறிவிக்குமாறு ஒருவரை நபி(சல்) அனுப்பினார்கள், என அபு பஷிர் அல் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவித்தார்கள். ஆதாரம் அல் புஹாரி, முஸ்லிம்.

*'அர்ருகா, அத்திமாயிம், அத்திவாலா, ஆகிய அனைத்தும் ஷிர்க்கான காரியங்களாகும்'* என முஹம்மத் நபி (சல்) அவர்கள் கூறியதாக, இப்னு மஸ்ஊத் (ரலி) அறிவிக்கிறார்கள். (ஆதாரம் அஹ்மத், அபுதாவுத்)

அர் ருகா அல்லது அல் அஸாயிம் என்பது மந்திரம் ஓதல், துஆ ஓதல், போன்ற காரியங்களை குறிக்கும் செயலாகும். ஷிர்க்கை காட்டும் காரியங்கள் சம்பந்தப்படாத விஷயங்களில் இவை அனுமதிக்கப் பட்டுள்ளன. விஷப் பிராணிகள் கடித்தல், கண் திருஷ்டியின் காரணமாக ஏற்படக்கூடிய கஷ்டங்கள் முதலிய துன்பங்களில் நின்றும் நிவாரணம் நாடி குர்ஆன் ஓதலை முஹம்மத் (சல்) அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

அத்திமாயிம் என்பது கண் திருஷ்டியிலிருந்து பாதுகாப்புத் தேடி சிறு பிள்ளைகளின் கழுத்தில் போடப்படும் தாயம் ஆகும். இந்த தாயங்களில் குர்ஆன் வசனங்கள் அல்லது அல்லாஹ்வின் திரு நாமங்கள் என்பன எழுதப்பட்டிருந்தால் சில முன்னோர்கள் இவற்றை அனுமதித்திருக்கிறார்கள். ஆயினும் இவற்றிற்கு அனுமதி வழங்காதவர்களில் இப்னு மஸ்ஊத் (ரலி) ஒருவராவார்.

அத் திவாலா என்பது கணவன் மனைவிக்கிடையில் பிணைப்பை (தாபம்) அதிகரிக்கக் கூடிய வழி தமக்குத் தெரியும் எனக்கூறி சிலர் செய்யும் செயல்களாகும்.

யாரேனும் ஒருவர் ஒரு தாயத்தை உபயோகித்தால், அல்லது அணிந்துக் கொண்டால் அத்தாயத்தின் பொறுப்பில் அவர் விடப்படுவார் என மர்பு ஹதிஸ் ஒன்றை அப்துல்லாஹ் பின் உகையிம் (ரலி) அவர்கள்) அறிவிக்கிறார்கள். - ஆதாரம் அஹ்மத், திர்மிதி.

*'ஓ ருவைபி! எனக்குப் பிறகு நீண்ட காலம் நீங்கள் உயிரோடு இருக்கக்கூடும். ஆகையால் யாரேனும் தன் தாடியில் முடிச்சிப் போட்டுக் கொண்டால், அல்லது ஒரு நூலை (பாதுகாப்பு நாடி) அணிந்துக் கொண்டால், அல்லது (சிறுநீர் கழித்தபின்)மிருகங்களின் எலும்பு, சானி ஆகியவற்றைக் கொண்டு சுத்தம் செய்துக் கொண்டால் அவர் உறவைவிட்டும் முஹம்மத் (சல்) நீங்கி விட்டதாக (சகல சம்பந்தங்களையும் துண்டித்துவிட்டதாக) மக்களுக்கு அறியப்படுத்துங்கள்.'* என நபி(சல்) கூறியதாக ருவைபி (ரலி) தெரிவித்தார்கள். ஆதாரம் - அஹமத்.

யாரேனும் ஒரு தாயத்தை அல்லது துஆ கூட்டை ஒருவரிடமிருந்து வெட்டியெறிந்தால் அச்செயல் ஒரு அடிமையை விடுதலை செய்த காரியத்துக்குச் சமமாகும் என ஸஈத் பின் ஜுபைர் அறிவிக்கிறார்.

குர்ஆன் வசனஙகள் எழுதியிருப்பினும், இல்லாவிடினும் எல்லா விதமான தாயம், துஆக்கூடு முதலியவற்றை முற்றாக வெறுத்ததாக இப்ராஹிம் நஃஹியிடமிருந்து வகீ அறிவிக்கிறார். இவ்விருவரும் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி)வின் தோழர்களாவர்.

## இப்பாடம் காட்டும் முக்கிய அம்சங்கள்:

மேல் குறிப்பிட்ட மூன்று செயல்களும் சந்தேகமின்றி ஷிர்க்கை சார்ந்தவைகளாகும்.

பாடம் - 8

## மரங்கள், கற்கள் போன்றவைகளில் ஆசி தேடும் மக்கள்.

உயர்தியாகிய அல்லாஹ் கூறுகிறான்: *'நீங்கள் (வணங்கும்) லாத்தையும் உஜ்ஜாவையும் கண்டீர்களா? மற்றொன்றாகிய மூன்றாவதான மனாத் (என்னும் பெண் விக்கிரகத்) தையும் நீங்கள் கண்டீர்களா?'* (53:19-20)

அபு வகீத் அல்-லயித்தி (ரலி) அறிவிக்கிறார்கள்: 'குப்ரை விட்டும் நீங்கிய புதிதில் அல்லாஹ்வின் தூதர் (சல்) அவர்களுடன் ஒரு முறை ஹுனைன் நோக்கிப் பிரயாணம் செய்தோம். வழியில் முஷ்ரிக்குகள் தாத் அன்வாத் என்ற பெயரில் ஒரு இலந்தைப்பழ மரத்தில் தம் ஆயதங்களை தொங்கவிட்டு, அங்கு இளைப்பாறிச் செல்வதைக் கண்டோம். *'அல்லாஹ்வின் தூதரே! எங்களுக்கும் இதனைப் போன்றதொரு தாத் அன்வாத் ஒன்றை செய்துக் கொடுப்பீர்களா?'* என்று நபி(சல்)யிடம் கேட்டோம். அதற்கு நபி(சல்) அவர்கள், *'அல்லாஹு அக்பர். என் உயிர் யார் கையில் இருக்கிறதோ, அந்த அல்லாஹ் மீது ஆணையாக நிச்சயமாக கடந்துபோன சமுதாயங்களின் வழிமுறை இதுவாகும். பனு இஸ்ராயில்கள் மூஸா(அலை)விடம் அவர்களுக்கு தெய்வங்கள் இருப்பதைப்போல் எங்களுக்கும் ஒரு தெய்வத்தை (நாங்கள் வணங்குவதற்கு) ஆக்கிவைப்பீராக என்று கேட்டதை போல் நீங்களும் கேட்கிறீர்கள். அதற்கு மூஸா நிச்சயமாக நீங்கள் அறியாதவர்களான ஒரு கூட்டத்தினராவீர்கள் என்று கூறினார்.'* 7.138. என்று பதில் கொடுத்தார்கள்.

### இப்பாடம் காட்டும் முக்கிய அம்சங்கள்:

- தாத் அன்வாத் போன்றதொரு மரமொன்றை சஹாபாக்களில் சிலர் கோரிய முறை.
- இச்செயல் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதும், அதன் மூலம் அல்லாஹ்வுக்கு மேலும் அருகில் நெருங்கக் கூடிய ஒரு வழியென்றும் என அவர்கள் பிழையாகக் கருதினார்கள்.
- அவர்களுடைய கோரிக்கையை நிராகரிக்கும் போது அல்லாஹு அக்பர் கடந்து போன சமூகங்களின் வழிமுறை இதுவாகும் எனக்கூறி இது எவ்வளவு பாதகமான விஷயம் என்பதை நபி (சல்) அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.
- தாம் செய்யநாடிய காரியத்தின் தன்மையைப்பற்றி ஆரம்பத்தில் சில ஸஹாபாக்கள்கூட அறிந்திருக்கவில்லை என்றால், அதற்கு நீண்ட காலத்தின் பின் வந்த சமூகங்கள் இவ்விஷயம் பற்றிய அறியாமையில் மூழ்கி இருப்பது ஆச்சரியமல்ல.

- லா இலாஹ இல் அல்லாஹ் - வணக்கத்துக்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்ற ஷஹாதாவில் மறைந்திருக்கும் அர்த்தத்தில், இப்படிப்பட்ட செயல்கள் யாவும் தடுக்கப்பட்டுள்ளன என்பதை பெரும்பான்மையான மக்கள் அறிவதில்லை.
- பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க் என இருவகை ஷிர்க் உள்ளன. அதனால் தங்கள் கோரிக்கையின் ஒரே காரணத்துக்காக ஸஹாபாக்கள் யாரும் முஷ்ரிக்குகளாக மாறவில்லை.
- முஹம்மத் (சல்) அவர்கள் இதனை விளக்கியபோது பொதுவாக மனிதனின் தன்மை இதுவென சுட்டிக் காட்டினார்கள்.
- யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் குர்ஆனில் அல்லாஹ் கண்டிக்கும் ஒவ்வொரு முறையும் அப்படிப் பட்ட காரியங்களைப் பற்றி எங்களுக்கும் எச்சரிக்கை செய்துள்ளான்.
- ஒருவர் பொய்யை விட்டும் நீங்கி, இறை நம்பிக்கைக் கொண்டு இஸ்லாத்தின் வாழ்கை முறையை அறிந்து, அவற்றைப் பின்பற்றத் தொடங்கியவுடன் தன் பழைய பழக்க வழக்கங்களை விட்டும் முழுமையாக நீங்கிவிட்டார், என உறுதியாகக் கூற முடியாது. *நாங்கள் கு.'.ப்ரை விட்டும் நீங்கிய புதிதில்...* என்ற ஸஹாபாக்கள் கூறியது இதற்கு சான்றாகும்.

பாடம் 9:

## <u>அல்லாஹ்வைத் தவிர ஏனையவர்களின் பெயரில் மிருகங்களை அறுத்தல்.</u>

கண்ணியமிக்க அல்லாஹ் கூறுகிறான். *'நிச்சயமாக என்னுடைய தொழுகையும் என்னுடைய அறுப்பு(குர்பானியு)ம் என் வாழ்வும் என் மரணமும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தானவையாகும் என (நபியே!) நீர் கூறுவீராக. அவனுக்கு யாதோர் இணையுமில்லை; (துணையுமில்லை) இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன்; இன்னும் (அவனுக்கு கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் (இந்த உம்மத்தில்) நான் முதன்மையானவன் (என்றும் கூறுவீறாக.)'* குர்ஆன்:6.162-163

*'ஆகவே நீர் உமதிரட்சகனைத் தொழுது இன்னும் (குர்பானியும் கொடுத்து அதை) அறுப்பீராக.'* குர்ஆன்:108.2

அலி இப்னு அபிதாலிப் பின்வருமாறு சொன்னார்கள். ‘அல்லாஹ்வின் நான்கு தீர்ப்புகளைப் பற்றி அல்லாஹ்வின் தூதர் எனக்குத் தெரிவித்தார்கள். அவையாவன:

1. அல்லாஹ்வைத் தவிர ஏனையவற்றின் பெயரில் அறுத்து குர்பானி செய்பவர்களை அல்லாஹ் சபிக்கிறான்;
2. தன் பெற்றோர்களை சபிப்பவர்களை அல்லாஹ் சபிக்கிறான்;
3. அல்லாஹ்வின் மார்க்கத்தில் இல்லாத புதிய ஒரு செயலை புகுத்தும் ஒருவனுக்கு அடைக்களம் கொடுப்பவனை அல்லாஹ் சபிக்கிறான்;
4. காணிகளின் எல்லையை காட்டும் அடையாளங்களை மாற்றம் செய்யும் ஒருவனை அல்லாஹ் சபிக்கிறான்;

*‘ஒரு மனிதன் ஒரு கொசுவின் காரணத்தால் சுவர்க்கம் சென்றான். இன்னொரு மனிதன் ஒருகொசுவின் காரணத்தால் நரகம் சென்றான்’* என்று அல்லாஹ்வின் தூதர் (சல்) அவர்கள் கூறினார்கள். ‘அது எப்படி சாத்தியமானது யா ரசூலல்லாஹ்!’ என ஸஹாபாக்கள் வினவினார்கள். *‘தாம் வணங்கும் சிலைக்கு ஏதேனும் காணிக்கை செலுத்தும் வரை, அதனை கடந்துச் செல்ல அனுமதி கொடுக்காத மக்கள் வாழ்ந்த இடத்தை இருவர் கடக்க நேரிட்டது. ஒரு மனிதரிடம் அந்த சிலைக்கு ஏதேனும் காணிக்கை செலுத்தும்படி அவர்கள் கட்டளையிட்டனர். ‘காணிக்கை செய்ய என்னிடம் எதுவும் இல்லை’ என அவன் கூறினான். ஒரு ஈ அல்லது கொசுவாயினும் காணிக்கை செலுத்துமாறு அவர்கள் சொல்ல அவன் அந்த சிலைக்கு ஒரு கொசுவை காணிக்கை செய்தான். அக்காரணத்தால் அவன் நரக நெருப்பில் நுழைந்தான். மற்ற மனிதரையும் அச்சிலைக்கு எதையேனும் காணிக்கை செய்யும்படி வற்புறுத்தியபோது ‘மகத்துவமும், கீர்த்தியுமிக்க அல்லாஹ்வுக்கன்றி வேறு யாருக்கும், எதற்கும், எதையும் காணிக்கை செய்யமாட்டேன்’ என அவர் மறுத்து விட்டார். அதனால் கோபம்கொண்ட அந்த மக்கள் அவரை கொலை செய்தார்கள். அந்த மனிதர் சுவர்க்கம் சென்றடைந்தார்.‘* என நபி (சல்) அவர்கள் கூறியதாக தாரிக் பின் ஷிஹாப் அறிவிக்கிறரர்கள். ஆதாரம் அஹ்மத்.

இப்பாடத்தின் முக்கிய அம்சங்கள்:

- அல்லாஹ்வையன்றி ஏனையவற்றிற்கு தானம் அல்லது குர்பான் கொடுப்பவர்களுக்கு அல்லாஹ்வின் சாபம்.
- தன் பெற்றோர்களை சபிப்பவருக்கு அல்லாவின் சாபம். (ஒருவர் மற்றவருடைய பெற்றோரை சபித்தால், அவர் கோபம் கொண்டு இவருடைய பெற்றோரை சபிப்பார்)

- இஸ்லாத்தில் இல்லாததொன்றை புகுத்தும் முஹ்தித் ஒருவருக்கு அடைக்களம் கொடுப்பவருக்கு அல்லாவின் சாபம். இஸ்லாமிய மதத்தில் மாற்றம் செய்யும் உரிமை அல்லாஹ் வுக்கு மாத்திரமே உள்ளதாகும். இதில் தலையிட்டு இஸ்லாத்தில் பித்ஆவை புகுத்தும் ஒருவருக்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்து பிரச்சினைகள் ஏற்பட்டால், அவருக்கு அடைக்களமும் கொடுப்பவருக்கு அல்லாஹ்வின் சாபம்.
- காணிகளின் எல்லையை காட்டும் அடையாளங்களை மாற்றம் செய்து, அடுத்தவரின் இடத்தை வஞ்சகமாக பிடித்துக் கொள்பவருக்கு அல்லாஹ்வின் சாபம்.
- ஒரு அற்ப கொசுவின் எனினும் மகத்தான பாடம்.
- ஒரு கொசுவை விக்கிரகத்திற்கு தானம் செய்து, நரகத்திற்கு சென்ற மனிதன் நாட்டமின்றியே அதனை செய்தார். அதுவும் விக்கிரகங்களை வணங்குபர்களின் ஆபத்திலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளவே அதனை செய்தார்.
- வெளிப்படையான ஒரு செயலையே கா.ஃ.பிர்கள் செய்யச் சொன்னாலும் அதனைக் கூட செய்ய மறுத்த மற்ற மனிதர் பொறுமையுடன் மரணத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம், இறை அச்சம் உள்ளவர்களுக்கு ஷிர்க் எவ்வளவு வெருப்பான செயல் என்பதை எடுத்துக் காட்டுகிறது.
- நரகம் புகுந்த மனிதன் ஒரு முஸ்லிமாகும். அந்த மனிதன் கா.ஃ.பிராக இருந்தால் ஒரு அற்ப கொசுவின் காரணமாக நரகம் புகுந்தார் என நபி (சல்) அவர்கள் கூறியிருக்கமாட்டார்கள்.
- 'நீங்கள் காலில் அணியும் சப்பாத்தை கட்டும் நாடாவை விட உங்களுக்கு மிக அருகில் சுவர்க்கம் உள்ளது. நரகமும் அதைப் போன்றதே' என்ற நபி மொழியை இந்தச் சம்பவம் உறுதிப் படுத்துகிறது.
- முஸ்லிமின் உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதே விக்கிரக வணக்கம் புரிபவர்களின் முக்கிய நோக்கமாகும்.

<u>பாடம் 10:</u>

## <u>அல்லாஹ்வைத் தவிர ஏனையவைகளின் மீது நேர்க்கை வைப்பது ஷிர்க்கான செயலாகும்</u>

*'இவர்கள் (தங்கள்) நேர்ச்சையை நிறைவேற்றுவார்கள்; இன்னும் ஒரு நாளையும் பயப்படுவார்கள்; அதன் தீமை எங்கும் பரவியதாக இருக்கும்.'* என அல்லாஹ் கூறுகிறான். குதுஆன்:76.7.

*'(நன்மைக்காக) செலவு வகையிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்த போதிலும் அல்லது நேர்ச்சையிலிருந்து நீங்கள் எதை*

*நேர்ச்சை செய்த போதிலும் அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான்; அன்றியும் அநியாயக்காரர்களுக்கு உதவி செய்வோர் (வேறு எவரும்) இல்லை.'* 2.270

*"அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து நடப்பதாக யாரேனும் உறுதியுடன் நேர்ச்சை வைத்தால், அவர் அல்லாஹ்வுக்குக் கீழ் படிந்து அதனை நிறைவேற்றட்டும். அல்லாஹ்வுக்கு கீழ்படியாடியாமல் நடப்பதாக யாரேனும் நேர்ச்சை வைத்தால், அவர் அதனை நிறைவேற்றாது இருக்கட்டும்."* என அல்லாஹ்வின் தூதர் (சல்) அவர்கள் கூறியதாக அயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள். ஆதாரம் அல்-புஹாரி.

இப்பாடத்தின் முக்கிய அம்சங்கள்:

- யாரேனும் நேர்ச்சை வைத்தால் அதனை நிறைவேற்றுவது கட்டாயக் கடமையாகும். நேர்ச்சை வைப்பது அல்லாஹ்வின் வணக்கத்தை சார்ந்த செயலில் ஒன்றாகும். அதனால் அல்லாஹ் அல்லாத ஏனையவைகள் மீது நேர்ச்சை வைப்பது ஷிர்க்கான செயலாகும். அல்லாஹ்வின் கட்டளைக்கு முறணான காரியங்களை செய்வதாக யாரேனும் நேர்ச்சை வைத்தால் அதனை செயல் படுத்த அவருக்கு அனுமதி இல்லை.

<u>பாடம் 11:</u>

## அல்லாஹ்வைத் தவிர ஏனையவைகளிடம் பாதுகாப்புத் தேடுவது ஷிர்க்கான செயலாகும்

*'இன்னும் நிச்சயமாக மனிதர்களிலுல்ல ஆண்கள் பலர் ஜின்களில் உள்ள ஆண்கள் பலரிடம் (தங்களை) காக்கத் தேடிக் கொண்டிருந்தனர் இதனால் அவர்கள் (ஜின்கள்) அவர்களை (மனிதர்களை) பாபத்திலும் இறையச்சமற்ற தன்மையில் கர்வத்தையும் அதிகமாக்கிவிட்டார்கள்.'* என அல்லாஹ் கூறுகிறான். குர்ஆன்:72.6

*"ஒரு தங்குமிடத்தில் நுழையும்போது 'அல்லாஹ்வின் வார்த்தைகளில் (படைப்பினங்களின்) தீங்குகளை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.' என யாரேனுமொருவர் கூறினால் அவர் அந்த இடத்தை விட்டும் நீங்கும் வரை அவரை எந்தத்தீங்கும் அனுகாது"* என அல்லாஹ்வின் தூதர்அறிவித்ததாக ஹவ்லா பின்த் ஹாகிம் தெரிவிக்கிறார். ஆதாரம் முஸ்லிம்.

இப்பாடத்தின் முக்கிய அம்சங்கள்:

- அல்லாஹ்வையன்றி ஏனையவைகளிடம் பாதுகாப்புத் தேடுவது ஷிர்க்கை சார்ந்த ஒரு செயலாகும்.
- இப்படிப்பட்ட காரியங்களின் உதவிகள் மூலம் உலகலாவிய ஒரு சில விஷயங்களில், சில சந்தர்ப்பங்களில், லாபமும், வெற்றியும் பெறவோ அல்லது சில தீங்குகளை அல்லது நஷ்டங்களை விட்டும் பாதுகாப்புப் பெறவோ சிலருக்க முடிந்த ஒரே காரணத்தல் இக்காரியங்களில் ஈடுபடுவது ஷிர்க்கை விட்டும் நீங்கியவை என்று ஒருவரும் கருதக் கூடாது.
- மேற்குறிப்பிட்ட ஹதீஸின் ஆதாரத்தின் மூலம் அல்லாஹ்வின் வார்த்தைகள் அவனுடைய படைப்பினங்களல்ல என இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் நிர்ணயிக்கிறார்கள். இதன் அடிப்படையில் படைப்பினங்களின் பாதுகாப்பை நாடும் காரியம் ஷிர்க்காகும்.
- மேற் குறிப்பிட்ட துஆ மிகச்சிறியதாயினும் பெரும் மகத்துவம் மிக்கது.

<u>பாடம் 12</u>

## <u>அல்லாஹ்வைத் தவிர ஏனையவைகளிடம் உதவி தேடுவதும் (இஸ்திகாதா), துஆ கேட்பதும் ஷிர்க்கான செயலாகும்</u>

*'இன்னும் அல்லாஹ்வைத் தவிர உமக்கு பயனளிக்காதவற்றை மற்றும் உமக்கு இடர் செய்யாதவற்றை நீர் அழைக்கவேண்டாம்.; அவ்வாறு செய்வீராயின் நிச்சயமாக அச்சமயமே அநியாயக் காரர்களில் (உள்ளவராக) நீர் ஆகிவிடுவீர். அல்லாஹ் உமக்கு ஒரு இடரை அடையச் செய்தால் அதனை நீக்குகிறவன் அவனைத் தவிர (வேறு) எவரும் இல்லை; மேலும் அவன் உமக்கு யாதொரு நன்மையை நாடினால் அவனது பேரருளை தடுப்பவர் எவருமில்லை; தன் அடியார்களில் அவன் நாடியவர்களுக்கு அதனை பெற்றுக் கொள்ளுமாறு செய்கின்றான்; அவனே மிக்க மன்னிப்போன்; மிகக் கிருபையுடையோன்.'* என அல்லாஹ் கூறுகிறான். குர்ஆன்:10.106-107.

*'(தவிர) அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குவதெல்லாம் விக்கிரகங்களைத்தான்; நீங்கள் பொய்யாக (உங்கள் கைகளால் அவைகளை)படைத்துக் கொண்டீர்கள். (ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குகின்றவை உங்களுக்கு*

*உணவளிக்கச் சக்திபெறமாட்டா. ஆகவே (உங்களுக்கு வேண்டிய) உணவை அல்லாஹ்விடம் தேடுங்கள்; அவன் பக்கமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்.'* குர்ஆன்:29.17

*'மேலும் அல்லாஹ்வை விடுத்து மறுமை நாள் வரை (அழைத்த போதிலும்) தனக்கு பதில் கொடுக்காதவர்களை அழைப்பவனை விட மிக வழிகெட்டவன் யார்? அவர்களோ இவனுடைய அழைப்பைப் பற்றி மறந்தவர்களாக உள்ளனர். மேலும் மனிதர்கள் (மறுமை நாளுக்காக) ஒன்று திரட்டப்பட்டால் (வணங்கப்பட்டவர்களான) அவர்கள் இவனுக்கு விரோதிகளாக இருப்பர். இவன் (தங்களை) வணங்கிக்கொண்டிருந்ததையும் அவர்கள் நிராகரிப்பார்கள்.'* குர்ஆன்:46.5-6

*'(உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா?) அல்லது கடுந் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டவன் அழைத்தால் (அவனுக்குப்) பதில் அளித்து மேலும் (அவனுடைய) துன்பங்களை நீக்கி இப்புவியில் (உங்களைத் தன்னுடைய) பிரதிநிதிகளாகவும் ஆக்கியவன் (சிறந்தவனா?) இத்தகைய அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்துக்கு உரியவன் இருக்கின்றானா? நீங்கள் சிந்திப்பது மிகக் குறைவாகும்.'* குர்ஆன்:27.62

முஹம்மத் (சல்) அவர்களுடைய காலத்தில் விசுவாசிகளுக்கு துன்பமிழைத்துக் கொண்டிருந்த முனாபிக் ஒருவன் இருந்தான். அவனுக்கு எதிராக அல்லாஹ்வின் தூதரிடம் உதவி கோருவோம் என விசுவாசிகள் சிலர் நபி(சல்)அவர்களிடம் சென்றார்கள். அந்த மக்களுக்கு 'யாரும் உதவி கோரி என்னைத் தேடக்கூடாது. நிச்சயமாக அனைவரும் அல்லாஹ்விடமே உதவியும், ஒத்தாசையும் தேடவேண்டும்' என நபி (சல்) பதிலளித்ததாக அத்-தபரானி ஆதாரத்துடன் தெரிவிக்கிறார்கள்.

இப்பாடத்தின் முக்கிய அம்சங்கள்:

- அல்லாஹ்வையன்றி ஏனையவைகளிடம் உதவி தேடுவது பெரும் ஷிர்க்கான ஒரு செயலாகும்.
- அல்லாஹ்விடம் அளவற்ற பற்றுள்ள மனிதராயினும், பிறருடைய தேவையின் பொருட்டு அல்லாஹ்வையன்றி ஏனையவைகளிடம் உதவி தேடினால் அவர் பெரும் அநியாயக்காரர் ஆகிவிடுவார்.
- அல்லாஹ்வையன்றி ஏனையவைகளிடம் உதவி தேடுவதால் இவ்வுலக வாழ்வில் எவ்விதப்பயனும் ஏற்படாதது மாத்திரமின்றி அச்செயல் மனிதரை குப்ருடைய வழிக்கு இட்டுச்செல்லும்.
- சுவர்க்கத்தை நாடும் யாரும் அல்லாஹ்வையன்றி ஏனையவை களிடம் உதவி கோருவதில்லை. அதே போன்று

உணவுகளையும் செல்வங்களையும் அல்லாஹ்வையன்றி ஏனையவைகளிடம் கோரக்கூடாது.

- அல்லாஹ்வையன்றி ஏனையவைகளிடம் உதவி தேடுபவனைவிட வழிகெட்டவன் யாருமில்லை.
- அல்லாஹ்வையன்றி வணங்கப்படும் ஏனையவைகள் தங்களை மனிதன் வணங்குவதையோ, தங்களிடம் உதவி தேடுவதையோ, ஒருபோதும் அறிய மாட்டார்கள். அவைகளுக்கு அவற்றை அறிவதற்குரிய சக்தியுமில்லை.
- அல்லாஹ்வையன்றி ஏனையவைகளிடம் உதவி தேடுபவதனால் வணங்குபவனுக்கும், வணங்கப்படுபவைகளுக்கும் இடையில் கோபமும், பகையும்தான் வளரும்.
- உதவிகோரி ஒன்றை அழைக்கும்போது, அச்செயல் அதற்கு செய்யப்படும் வணக்கமாகக் கருதப்படுகிறது.
- மறுமை நாளுக்காக அனைவரும் ஒன்று திரட்டப்படும் போது வணங்கப்பட்டவைகளான அவைகள், மனிதன் தங்களை வணங்கிக் கொண்டிருந்ததையும் நிராகரிப்பார்கள்.
- இப்படிப்பட்வர்களை அழைப்பவன் மனிதர்களில் மிகவும் வழி கெட்டவன்.
- துன்பங்கள் ஏற்படும் போது அவற்றை நீக்கி அருள் புரிபவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று விக்கிரகங்களை வணங்குபவர்கள் கூட அறிவார்கள். அதனால் தான் அவர்களும் தாங்கமுடியாத துன்பங்கள் ஏற்படும் போது அல்லாஹ்விடமே உதவிகோரி ஏகமனதோடு பிரார்த்தனை புரிகிறார்கள்.

பாடம் 13

## மரித்த ஒரு நல்ல மனிதரின் அடக்கத்தலத்தில் அல்லாஹ்வை வணங்குவது தடையாகும். அச்செயல் மரித்தவனை வணங்கும் செயலாகும்

உம் சலாமா (ரலி) ஒருமுறை அபிசீனியாவில் கிறிஸ்தவக் கோவிலில் சிலைகளும், சித்திரங்களும் நிறைந்து இருப்பதைத்தான் கண்டதாக நபி (சல்) அவர்களிடம் கூறினார்கள். அதற்கு நபி (சல்) 'அவர்களில் ஒரு நல்ல மனிதர் அல்லது இறைபக்தர் இறந்தால் அவரை அடக்கிய ஸ்தலத்தின் (கப்ரின்)மீது வணக்கத்தலமொன்றை கட்டி, அதில் சிலைகளையும் சித்திரங்களையும் வைப்பார்கள். அல்லாஹ்வின் சன்னிதானத்தில் எல்லாப் படைப்பினங்களையும் விட அவர்கள் மிகவும் கீழ்த்தரமானவர்கள். அவர்கள் இரண்டு தீமைகளை செய்கிறார்கள். ஒன்று பிணக்குழியில் வணங்குவது. மற்றது சிலைகளும், சிற்பங்களும் வடிப்பதுமாகும்.' என பதிலளித்த

தாக அயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள். ஆதாரம் அல்-புஹாரி, முஸ்லிம்.

அல்லாஹ்வின் தூதர் (சல்) அவர்களை மரணம் நெறுங்கியபோது ஒரு (போர்த்தும்) புடவையை தன் முகத்தில் போட்டுக் கொள்வார்கள். சிலசமயங்களில் வேதனையின் காரணமாக அதனை நீக்குவார்கள். அப்படியான வேதனையில் இருக்கையில் ஒருமுறை *'தங்கள் நபிகளுடைய பிணக்குழிகளை வணக்கத்தலமாக எடுத்துக் கொண்ட கிறிஸ்தவர்கள் மீதும் யூதர்கள் மீதும் அல்லாஹ்வின் சாபம் உண்டாகும்'* எனக்கூறி அத்தகைய செயல்களை விட்டும் மக்களை எச்சரிக்கை செய்தார்கள். முஹம்மத் (சல்) அவர்களின் அடக்கத்தலத்தை சிலர் வணக்கத்தலமாக மாற்றுவார்கள் என்ற பயம் இல்லையென்றால் நபி (சல்)அவர்களுடைய அடக்கத்தலமும் ஏனைய சகாபாக்களுடைய (ரலி) அடக்கத்தலத்தைப் போன்று திறந்த நிலையில் இருந்திருக்கும்.

*'உங்களில் எவரையும் ஹ.்லீலாக(நெறுங்கிய நண்பனாக) எடுத்துக் கொள்வதில் நின்றும் நான் அல்லாஹ்விடம் தெளிவாக மீள்கின்றேன். நிச்சயமாக இப்ராஹிம்(அலை) அவர்களை அல்லாஹ் ஹ.்லீலாக எடுத்துக் கொண்டதுபோல் என்னையும் தன் ஹ.்லீலாக எடுத்துக்கொண்டான். நானும் அபுபக்கர்(ரலி)வை ஹ.்லீலாக எடுத்திருக்ககலாம். உங்களுக்கு முன்சென்ற சமூகத்தைப்பற்றி எச்சரிக்கையாக இருங்கள். அவர்கள் தம் நபிமார்கள் அடக்கப்பட்ட ஸ்தானங்களை வணக்கஸ்தலங்களாக அமைத்துக்கொண்டார்கள். அத்தகைய செயலிலிருந்தும் உங்களை தடுக்கிறேன்.'* என தன் மரணத்திற்கு ஐந்து தினங்களுக்கு முன் நபி (சல்) அவர்கள் கூறக்கேட்டதாக ஜுன்துப் பின் அப்துல்லாஹ் அறிவிக்கிறார்கள். ஆதாரம் முஸ்லிம்.

நபி (சல்) அவர்கள் தன் வாழ்வின் கடைசி நேரத்திலும் இத்தகைய செயலை தடுத்தார்கள். அடக்க ஸ்தானங்களை (பிணக்குழிகளை) வணக்க ஸ்தலமாக அமைத்துக் கொள்ளும் செயலில் ஈடுபடும் அனைவரையும் அதன் பின் சபித்தார்கள். அடக்க ஸ்தலங்களில் மஸ்ஜித் இருப்பினும் இல்லாவிடினும் அதன் அருகில் வணக்கம் புரிவது மேற்குறிப்பிட்ட ஒரு செயலாகும். தன் அடக்கஸ்தலம் ஒரு மஸ்ஜிதாக மாற்றப்படும் என நபி (சல்) பயந்தார்கள் என்ற கூற்றின் பொருள் இதுவாகும். நபி(சல்) அவர்களுடைய அடக்க ஸ்தலத்தின் அருகில் எந்த ஒரு கட்டிடத்தையும் சகாபாக்கள் அமைக்கவில்லை. ஒரு இடத்தில் வணக்கம் புரிந்தால் அல்லது வணக்கம் புரிய நாடினால் அந்த இடம் மஸ்ஜிதாக கருதப்பட்டதாக பொருள் படும்.

*‘முழு உலகமும் எனக்கு மஸ்ஜிதாக அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.’* என்ற நபி (சல்) அவர்களின் கூற்றை கவனிக்கவும்.

*‘எந்த மக்கள் உயிருடன் இருக்கையிலேயே அவர்கள் மத்தியில் மறுமை நாளின் அடையாளம் இறங்குகிறதோ அவர்களும், பிணக் குழிகளை வணக்க ஸ்தலங்களாக ஆக்கிக் கொண்டவர்களும். மிகக் கேடு கெட்டவர்கள்.’* என அல்லாஹ்வின் தூதர் (சல்) கூறியதாக இப்னு மஸ்ஊத் (ரலி) மர்பூ ஹதீஸ் ஒன்றை அறிவிக்கிறார்கள். ஆதாரம் அஹ்மத். ஆபு ஹாதிம் ஸஹீஹான ஹதிஸில் இதே கருத்தை அறிவிக்கிறார்கள். ஆதாரம் அஹ்மத்.

இப்பாடத்தின் முக்கிய அம்சங்கள்:

- ஒரு நல்ல மனிதரின் அடக்க ஸ்தலத்தின் அருகில் உன்னத நோக்கத்துடன் மஸ்ஜித் கட்டும் மக்களுக்கும் அல்லாஹ்வின் தூதர் (சல்) அவர்கள் கொடுத்த எச்சரிக்கை.
- சிலைகள், சிற்பங்கள் செதுக்கும் செயலுக்குத் தெரிவித்த தடையும், அவற்றின் விளைவுகளும்.
- இந்த விஷயம் பற்றி நபி (சல்) அவர்கள் ஆணித்தரமாக தெரிவித்த முறை. ஆரம்பத்தில் அன்போடு மக்களுக்கு இவையின் விளைவுகளை விளக்கினார்கள். தன் மரணத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன், முதலில் விளக்கியவற்றை மறுபடியும் திருப்பிச் சொன்னார்கள். தன் கடைசி மூச்சு நெருங்கும் போது முன் சொன்னவை போதாது என உணர்ந்து, மரண வேதனையின் மத்தியிலும் இவ்விஷயம் பற்றி ஆணித்தரமாக உரைத்தார்கள்.
- தன் அடக்க ஸ்தலம் மஸ்ஜிதாக மாற்றப்படுவதை மரணத்திற்கு முன்பே நபி (சல்) அவர்கள் கடுமையாக தடுத்தார்கள்.
- தங்கள் நபிமார்களின் அடக்க ஸ்தலங்களை வணக்கத்தலமாக மாற்றியமைத்துக் கொள்வது கிறிஸ்தவர்களதும், யூதர்களதும் வழக்கமாகும்.
- இத்தகை வணக்கங்களுக்காக நபி (சல்) அவர்கள் கிறிஸ்தவர் களையும் யூதர்களையும் சபித்தார்கள்.
- இதன் மூலம் தன்னுடைய அடக்க ஸ்தலத்தைப் பற்றியும் நபி(சல்) எங்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள்.
- இக்காரணத்தால் நபி (சல்) அவர்களின் அடக்க ஸ்தலம் உயர்த்திக் கட்டப்படவில்லை.
- அடக்க ஸ்தலங்களை மஸ்ஜிதுகளாக அமைப்பதன் விளக்கம்.
- அடக்க ஸ்தலங்களை வணக்கத்தலமாக அமைக்கும் மக்களையும், உயிருடன் இருக்கையிலேயே மறுமை நாளின் அடையாளம் தம் மத்தியில் இறங்கும் மக்களையும் நபி (சல்)

அவர்கள் இனைத்துக் காட்டினார்கள். இதன் மூலம் ஷிர்க்கான காரியம் நடைபெறுவதற்கு முன்பே அதற்கு இட்டுச் செல்லும் வழிகளையும், அவற்றின் பயங்கர விளைவுகளையும் நபி (சல்) அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

- இஸ்லாத்தில் பித்ஆக்களை தீவிரமாகத் திணிக்கும் ராபிதா மற்றும் ஜஹ்மியா என்ற இரு கூட்டத்தாரும் நபி (சல்) அவர்களின் கூற்றின் காரணமாக நிராகரிக்கப்பட்டு விட்டார்கள். இவ்விரு கூட்டங்களும் ஏற்கெனவே இஸ்லாத்திலிருந்து நீங்கி விட்டார்கள் என்று கூறி இஸ்லாத்தில் வழி கெட்ட 72 கூட்டங்களில் இவ்விரு கூட்டங்களையும் மார்க்க அறிஞர்கள் சேர்க்கவில்லை. இஸ்லாத்தில் ஷிர்க்கான காரியங்கள் புகுத்தப் படவும், அடக்க ஸ்தலங்களில் வணக்கம் புரியவும் ராபிதா என்ற கூட்டமே காரணம். பிணக்குழியின் மீது முதலில் மஸ்ஜித் எழுப்பியது இக்கூட்டமே.
- அல்லாஹ்வின் திருத்தூதர் (சல்) அவர்கள் கூட சகராத் எனும் மரண வேதனைக்கு ஆளானார்கள்.
- முஹம்மது நபி (சல்) அவர்களை ஹ.்.லீலாக அல்லாஹ் ஏற்றுக் கொண்டு அவருக்கு கொடுத்த உன்னத அந்தஸ்து, நெருங்கிய சினேகம் அன்பைவிட உயர்ந்தது எனக்காட்டுகிறது.
- அபு பக்கர் அஸ் ஸித்தீக் (ரலி) நபி (சல்) அவர்களுக்கு சகாபாக்களில் மிக நெருங்கியவர் எனக்காட்டுகிறது.
- நபி (சல்) அவர்கள், தனக்குப்பின் அடுத்த கலீபா அபு பக்கர் (ரலி) என சுட்டிக்காட்டிய முறை.

<u>பாடம் 14</u>

## <u>ஒரு நல்ல மனிதரின் அடக்கத்தலத்தில் செய்யும் செயல் எல்லை மீறும்போது அது மரித்தவரை விக்கிரகத்திற்கு சமமாக்கும்</u>

*'யா அல்லாஹ்! என்னுடைய அடக்கத்தலத்தை காபிர்களின் விக்கிரகத்தை போன்று செய்து விடாதே. தங்கள் நபிமார்களின் அடக்கத்தலத்தை மஸ்ஜிதுகளாக மாற்றியமைத்த மக்கள் மீது அல்லாஹ்வின் கோபம் கடுமையானது.'* என நபி முஹம்மத் (சல்) கூறியதாக இமாம் மாலிக் தன் முவத்தா என்ற புத்தகத்தில் எழுதி யிருக்கிறார்கள்.

'நீங்கள் (வணங்கும்) லாத்தையும் உஜ்ஜாவையும் கண்டீர்களா?' 53.19 என்ற வசனத்திற்கு முஜாஹித். மன்சூர். சுபியான் மூலம் இப்ன் ஜரீர் (அத்-தப்பாரி) பின்வரும் விளக்கம் கொடுக்கிறார்.

*'லாத் என்ற மனிதர் கோதுமை அல்லது பார்லி மாவும் நெய்யும், தண்ணீரும் கலந்து சவிக் என்ற உணவை செய்து மக்காவுக்கு யாத்திரை செய்யும் மக்களுக்கு பகிர்ந்து கொடுப்பார். லாத் இறந்த பிறகு அவரை அடக்கிய இடத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவருடைய ஆசிர்வாதம் தேடி உட்கார்ந்து இருப்பார்கள்.'*

இதே கருத்தை இப்ன் அப்பாஸ்(ரலி) இடமிருந்து அபுல் ஜவ்சா (ரலி) அறிவிக்கிறார்கள்.

*'அல்லாஹ்வின் தூதர் (சல்) அவர்கள் கப்ர் ஸ்தானங்களை தரிசிக்கும் பெண்களை சபித்தார்கள். அதோடு கப்ர் ஸதானங்களில் மஸ்ஜித்கள் கட்டுபவர்களையும், விளக்குகள் எரித்து அவற்றை பிரகாசமாக வைப்பவர்களையும் சபித்தார்கள்.'* என இப்னு இப்பாஸ் (ரலி) அவர்கள் தெரிவிக்கிறார்கள். அபு தாவுத், அத்-திர்மிதி, இப்னு மாஜா, அன் நஸாய் ஆகிய அனைவரும் இந்த ஹதீஸை உறுதிப் படுத்துகிறார்கள்.

இப்பாடத்தின் முக்கிய அம்சங்கள்:

- விக்கிரகங்களைப் பற்றிய விளக்கம்.
- வணக்கங்களைப் பற்றிய விளக்கம்.
- பிற்காலத்தில் ஏற்படக்கூடும் என அஞ்சிய தீங்குகளைப் பற்றி நபி(சல்) அவர்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார்கள்.
- *'யா அல்லாஹ்! என்னுடைய அடக்கத்தலத்தை விக்கிரகத்தை போன்று ஆக்கிவிடாதே..'* என்ற துஆவுடன் சவக்குழிகளை தம் வணக்கத்தலமாக அமைத்துக் கொண்ட மக்களையும் குறிப்பிட்டார்கள்.
- சவக்குழிகளின் மீது வணக்கம் புரியும் மக்கள் மேல் ஏற்படும் அல்லாஹ்வின் கடுமையான கோபம்.
- இஸ்லாத்திற்கு முன்பு மக்கள் மத்தியில் லாத் என்ற விக்கிரக ஆராதனை மக்காவில் எப்படி தொடங்கியது என்ற விளக்கம்.
- லாத் என்பவர் ஒரு நல்ல மனிதர். அவர் இறந்த பின் அவரை அடக்கிய இடத்தில் ஏற்பட்ட விளைவுகளும், லாத் என்ற பெயரில் விக்கிரக ஆராதனை ஏற்பட்ட காரணமும்.
- கப்ரு ஸ்தானங்களை தரிசிக்கும் பெண்களையும், கப்ருகளை விளக்குகள் போட்டு அலங்கரிப்பவர்களையும் நபி(சல்) அவர்கள் சாபம் செய்த முறை.

<u>பாடம் 15</u>

## ஷிர்க்கை நோக்கி இட்டுச்செல்லும் எல்லா வழிகளையும் முஸ்தபா (சல்) தடுத்தார்கள்

'*(விசுவாசிளே!) உங்களிடமிருந்தே திட்டமாக ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கறார்; (உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டப்படுவது அவருக்கு மிக வருத்தமாக இருக்கும்; உங்கள் மீது மிக்க பேராசை கொண்டவர், விசுவாசிகளோடு மிக இரக்கமுள்ளவர், மிகக் கிருபையுடையவர். (நபியே! இதற்குப்) பின்னரும் அவர்கள் (உம்மை ஏற்காது) விலகிக்கொண்டால் (அவர்களிடம்) நீர் கூறுவீராக, 'அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன், அவனைத் தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயனில்லை, அவன்மீது (என் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக நம்பிக்கை வைத்து உள்ளேன், அவனே மகத்தான அர்ஷின் அதிபதி.'* குர்ஆன்:9.128-129

*'உங்கள் வீடுகளை மையத்அடக்கும் தலமாக ஆக்கவேண்டாம். என்னுடைய அடக்கத்தலத்தை கொண்டாட்டம் நடத்தும் இடமாக ஆக்கவேண்டாம். என்மீது சலாம் கூறுங்கள். நீங்கள் எங்கிருந்து எனக்கு சலாம் கூறினாலும் அவை எனக்கு அறிவிக்கப்படும்.'* என முஹம்மது நபி (சல்) கூறியதாக அபு ஹுரைரா (ரலி) அறிவிக்கி றார்கள். ஆதாரம் நேர்மையான அறிவிப்பாளர்கள் மூலம் அபுதாவுத்.

நபி (சல்) அவர்களின் அடக்கத்தலத்திற்குச் சென்று அங்கு துஆ செய்யும் ஒருவரைக் கண்ட அலி பின் ஹுஸைன் அவரை அக்காரியத்திலிருந்து தடுத்து அவருக்கு பின்வருமாரு கூறினார். *'நபி (சல்) அவர்களிடமிருந்து என் பாட்டனாரும் (அலி ரலி), அவரிடமிருந்து என் தந்தையும் கேட்டு எனக்கு அறிவித்த ஹதிஸ் ஒன்றை கூறவா? 'என் அடக்கத்தலத்தை கொண்டாட்டம் நடத்தும் இடமாக ஆக்காதீர்கள். அதே போன்று உங்கள் வீடுகளையும் மையத் அடக்கும் இடமாக ஆக்காதீர்கள். என் மீது சலாம் கூறுங்கள். நீங்கள் எங்கிருந்து சலாம் கூறினும் அவை எனக்கு அறிவிக்கப் படும்.'* ஆதாரம் இமாம் அல் மக்தஸ்ஸியின் அல் மு.ஃ.ஹ்தரா என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

இப்பாடத்தின் முக்கிய அம்சங்கள்:

- ஷிர்க்கின் எல்லையிலிருந்து தன் உம்மாக்களை கூடியவரை தூர விலக்கி வைப்பதற்கு நபி (சல்) இயன்ற அளவு முயற்சி செய்தார்கள்.

- எங்களுடைய நல் வாழ்வுக்காவும், வெற்றிக்காகவும் நபி (சல்) காட்டிய அக்கறையும், எங்கள் மீதுள்ள கருணையும்.
- கப்ரு ஸ்தானங்களை தரிசித்தல் நற்கருமங்களில் ஒன்றாக இருப்பினும் தன்னுடைய அடக்க ஸ்தலத்தை குறிப்பிட்ட முறையில் தரிசிப்பதை நபி (சல்) முற்றாகத் தடுத்தார்கள்.
- கப்ரு ஸ்தானங்களை அளவுக்கு மீறி தரிசிப்பதையும் நபி (சல்) தடுத்தார்கள்.
- வீடுகளில் ந.ஃ.பில் வணக்கங்களை செய்யுமாரு நபி(சல்) மக்களுக்கு ஊக்கம் கொடுத்தார்கள்.
- மையத் அடக்கும் ஸ்தானங்களில் வணக்கம் புரியக்கூடாது என்ற தடை சகாபாக்களும் அறிந்த விஷயமாகும்.
- நபி (சல்) அவர்கள் மீது ஒருவர் எங்கிருந்து சலாம் கூறினாலும் அது அவர்களை சென்றடையும் என்ற விளக்கம். சிலருடைய பிழையான கருத்தின்படி நபி (சல்) அவர்களின் கப்ரின் அருகில் நெருங்கி நின்று சலாம் கூற வேண்டிய அவசியமில்லை என்பது தெளிவாகிறது.
- 'அல்-பர்ஸஹ்' என்ற நிலையில் இருக்கும் நபி (சல்) அவர்களுக்கு உம்மத்துக்கள் கூறும் சலவாத்தும் சலாமும் தெரிவிக்கப்படும்.

<u>பாடம் 16</u>

## <u>தண்ணீரின் வகைகளும் அசுத்தங்களும்</u>

நீரை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. சுத்தமான நீர் - இதில் வுழு செய்ய அனுமதி உண்டு.
2. அசுத்தமான நீர்- இதில் வுழு செய்ய அனுமதியில்லை.

## சுத்தமான நீர்:

- முத்லக்கான நீர் - இயற்கையான மழை நீர், கடல், குளம், குட்டை போன்றவைகளில் சேர்ந்து, நீண்ட காலமாக ஒரே இடத்தில் தேங்கி இருந்து, அவற்றில் மரங்களின் இலைகள், பாசி போன்றவைகள் நீரிலிருநது பிரிக்கமுடியாது இரண்டரக் கலந்து இருப்பது.

- சோப்பு, மா, உப்பு, போன்ற சுத்தமானவைகள் நீரில் கலந்து இருப்பினும், நீரின் தன்மை சுத்தமாக இருப்பது.

- இரண்டு குல்லாக்களுக்கு சமமான அல்லது கூடிய நீர். இந்த அளவுள்ள நீரில் ஏதேனும் அசுத்தங்கள் கலந்திருப்பினும் நீரின் நிறம், மணம், சுவை, ஆகியவற்றில் மாற்றம் ஏற்படாதிருப்பின் அது சுத்தமான நீர் எனக் கருதப்படும்.

  ஒரு குல்லா என்பது 95.62 லீட்டருக்கு சமமாகும்.

## அசுத்தமான நீர்:

- இரண்டு குல்லாக்களுக்கு குறைந்த அளவு நீரில் ஏதேனும் அசுத்தங்கள் கலந்து, அதன் காரணமாக நீரின் நிறம், மணம், சுவை ஆகையவற்றில் மாற்றம் ஏற்பட்டாலும் ஏற்படாவிடினும் அது அசுத்தமான நீர் எனக் கருதப்படும்.

- இரண்டு குல்லாக்களுக்கு அதிகமான அளவு நீரில் ஏதேனும் அசுத்தங்கள் கலந்து அதன் காரணமாக நீரின் நிறம், மணம், சுவை ஆகையவற்றில் மாற்றம் ஏற்பட்டிருப்பின் அது அசுத்தமான நீர் எனக் கருதப்படும்.

அசுத்தங்கள்:

1. மனிதனின் மலம்.
2. மனிதனின் சலம்.
3. எக்காரணத்திற்காகவும் சிந்தப்பட்ட இரத்தம்.
4. நாயின் எச்சில்.
5. உணவுக்கு அனுமதிக்கப்படாத பிராணிகளின் மலசலம்.
6. பன்றி
7. பின்வரும் பிராணிகளைத் தவிர ஏனைய பிராணிகளின் சடலங்கள்:
   - கடற் பிராணிகள், வெட்டுக்கிளிகள்.
   - இரத்த ஓட்டமற்ற ஈ, கொசு போன்ற பிராணிகள்.
   - உணவுக்கு ஹலாலான பிராணிகள் செத்து அவற்றின் மயிர், தோல், இறகு, எலும்பு, கொம்பு, நகம் போன்றவை.

பாடம் 17

# வுது செய்யும் முறையும் காலுறைகளை தடவுதலும்

முஹம்மது நபி (சல்) அவர்கள் வுது செய்த முறையில் வுதுவின் கட்டாயக் கடமைகளையும், சுன்னாவையும் இனைத்து பின்வருமாரு காட்டப்பட்டுள்ளது.

1. அல்லாஹ்வுடைய வணக்கத்துக்காக வுது செய்வதாக உள்ளத்தில் நிய்யாஹ் எனும் நினைவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வுது செய்யும் இந்த நிய்யாஹ்வை உள்ளத்தில் வைத்திருக்க வேண்டுமே தவிர நாவால் மொழியக்கூடாது.
2. பிஸ்மில்லாஹ் (அல்லாஹ்வின் பெயரால்) என்று வுதுவின் ஆரம்பத்தில் மொழியவேண்டும்.
3. இரு கைகளையும் மணிக்கட்டு வரை நன்றாகத் தேய்த்து விரல்களுக்கிடையில் தண்ணீர் ஓடக் கூடிய முறையில் கழுவ வேண்டும்.
4. வாயை மூன்று முறை கழுவ வேண்டும். மிஷ்வாக் பாவிப்பது சிறந்தது. இல்லாவிட்டால் கைவிரல் அல்லது பல் தேய்க்கும் பிரஷ் கொண்டு பற்கள், ஈருகளை சுத்தம் செய்ய வேண்டும். இதன் முக்கியத்தை சுட்டிக்காட்ட *'என்னுடைய உம்மாத்துக்களுக்கு ஒரு சுமையாக இல்லாவிட்டால் ஒவ்வொரு முறை வுது செய்யும் போதும் மிஷ்வாக்கை உபயோகிக்குமாறு கட்டளையிட்டிருப்பேன்.'* என நபி (சல்) கூறினார்கள். இமாம் மாலிக்.
5. மூக்கினுல் நீரை செலுத்தி மூன்று முறை மூக்கை கழுவுதல்.
6. இரு கைகளினால் முகத்தை மூன்று முறை முழமையாகக் கழுவுதல். நெற்றிக்கு மேலிருந்து நாடியின் கீழ் வரையும் ஒரு காதிலிருந்து மறு காது வரையும் கழுவுதல்.
7. முதலில் வலது கையையும், பின் இடது கையையும் முழங்கை வரை நன்றாகத் தேய்த்துக் கழுவுதல்.
8. இரு கைகளையும் நனைத்து நெற்றக்கு மேலிருந்து பிடரி வரையும், மறுபடியும் முன் தலை வரையும் கொண்டு வந்து மஸ்ஹு செய்தல். கழுத்தை நனைக்கக் கூடாது.
9. அதே கைகளை மீண்டும் நனைக்காமல் இரு காதுகளையும் சுத்தம் செய்தல். ஆள்காட்டி விரலால் செவிக்குள்ளும் பெரு விரலால் செவித்தொலியின் பின்புறத்தையும் தடவுதல்.
10. கனுக்கால் வரை இரு கால்களையும் மூன்றுமுறை கழுவுதல். முதலில் வலது காலையும், பின்பு இடது காலையும் நன்றாக தேய்த்து கால் விரல்களுக்கிடையில் நீர் ஓடவிட்டுக் கழுவ வேண்டும்.

கால் உறைகளுக்கு மேல் தட்வுதல்.(மஸ்ஹு)

1. ஒருவரின் வுது முறிந்தால் மறுபடியும் வுது செய்யும்போது இரு கால்களையும் கழுவுவதற்குப் பதிலாக தன் இரு கைகளையும் நனைத்து கால்உறைகளுக்கு மேல் தடவ அனுமதி உண்டு. வுது செய்த பிறகு கால்உறைகளை அணிந்திருக்க வேண்டும், என்பதோடு வுது முறியும் வரை காலணிகளை கழற்றி யிருக்கக் கூடாது.
2. பயணம் செல்லும் மனிதருக்கு மூன்று இரவுகளும் மூன்று பகலும் (72 மணி), தன் இடத்தில் இருக்கும் மனிதருக்கு ஒரு இரவும் ஒரு பகலும் (24 மணி) இச்சலுகை உண்டு.

## காலுரைக்கு மேல் துடைப்பது எப்படி?

காலணியை (சப்பாத்தை) கழற்றி இரு கைகளையும் நனைத்து காலுரையின் மேல் பாகத்தை தடவவேண்டும. பாதத்தின் கீழ்ப் பகுதியை தடவக்கூடாது. இது நபி (சல்) செய்த முறையாகும்.

## காலுரைக்கு மேல் துடைக்கும் (மஸ்ஹு) சலுகை முறிவது எப்படி?

பின்வரும் ஏதேனும் ஒரு சம்பவம் நடைபெற்றால் காலுரைக்கு மேல் துடைக்கும் சலுகை நீங்கும்.

1. அனுமதிக்கப்பட்ட சலுகைக் காலம் முடிவடையும் போது:
2. காலுரைகளை கழற்றும் போது:
3. 'குஸ்ல்' (அத்தியாவசியக் குளிப்பு) காரியத்திற்கு அவசியமான சம்பவம் ஏதேனும் நடைபெறும் போது.

<u>பாடம் 18</u>

# <u>வுது செயலுக்குரிய நிபந்தனைகள்</u>

1. இஸ்லாத்தை தழுவியிருக்க வேண்டும்.
2. சுத்தம்.
3. சுய நினைவு
4. நிய்யாஹ் எனும் எண்ணம் - நிய்யஹ்வை உள்ளத்தில் வைத்திருக்க வேண்டுமேயன்றி நாவால் மொழியக்கூடாது.
5. மலசலம் கழித்தபின் தண்ணீரை உபயோகித்து (இஸ்தின்ஜா) அல்லது கற்களையோ கடதாசியையோ உபயோகித்து (இஸ்திஜ்மார்) சுத்தம் செய்துக் கொண்டிருக்க வேண்டும்.

6. ஹலாலான முறையில் பெற்றுக் கொண்ட சுத்தமான நீர்.
7. சாயம் போன்ற ஏதேனும் உடம்பில் பட்டு, வுது செய்யும் நீர் சருமத்தில் படுவதை தடுக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்..

முன் பின் துவாரங்களினால் சலம், காற்று முதலியன தொடர்ந்து வெளிப்படும், அல்லது பெண்களுக்கு தொடர்ந்து மாதவிடாய் ஏற்படும் உபாதைகளினால் கஷ்டப்படுபவர்கள், தொழுகை நேரம் வந்த பின்பு வுது செய்துக் கொள்ள வேண்டும். தொழுகையை துவங்கி, மத்தயில் இருக்கும்போது இப்படிப்பட்ட உபாதைகள் ஏதேனும் ஏற்பட்டால், அவர்களுடைய வுது முறியாது என்பதால் தமது தொழுகையை தொடர்ந்து செய்து முடிக்க வேண்டும்.

<u>பாடம் 19</u>

## <u>வுதுவின் அத்தியாவசியச் செயல்கள்</u>

1. முகத்தை முழுமையாகக் கழுவுதல் (வாயை கொப்பளித்து, நாசித் துவாரங்களையும் சுத்தம் செய்வது உட்பட)
2. இரு கைகளையும் முழங்கை வரை கழுவுதல்.
3. தலையை ஒருமுறை மஸஹ் செய்தல்.
4. இரு கால்களையும் கணுக்கால் வரை கழுவுதல்.
5. மேற் குறிப்பிட்ட செயல்களை அதே ஒழுங்கு முறைப்படிச் செய்தல்.
6. வுதுக் காரியத்தை அவசியமின்றி நிறுத்தாமல் தொடர்ந்து செய்து முடித்தல்.

<u>பாடம் 20</u>

## <u>வுதுவை முறிக்கும் செயல்கள்</u>

கீழ் வரும் விஷயங்களில் ஏதேனும் ஒன்று நிகழும்வரையில் ஒருவர் வுது நிலையில் இருப்பார்.

1. முன்பின் துவாரங்களில் இருந்து ஏதேனும் வெளிப்படுதல். அப்படி ஏதேனும் நிகழ்ந்தால் ஒருவர் வுது செய்துக் கொள்ளு வதற்கு முன் தன் உடம்பின் அசுத்தங்களை நீக்கி சுத்தம் செய்துக்கொள்ள வேண்டும். உடல் சுத்தம் செய்வதற்கு நீரை உபயோகிக்க வேண்டும். ஒருவர் வுது செய்துக் கொள்வதற்கு கற்கள், காய்ந்த மரத்துண்டுகள், கடதாசி, போன்ற காய்ந்த பொருட்களையும் பாவிக்க முடியும். இச்செயல் 'இஸ்திஜ்மார்'

எனப்படும். இஸ்திஜ்மார் செய்யும் போது 3 அல்லது 5 போன்ற ஒற்றை இலக்கங்களில் உபயோகிப்பது சிறப்பாகும். சுத்தம் செய்துக்கொள்ளும் போது தன் ஆடையில் அல்லது உடம்பில் அசுத்தங்கள் முழுமையாக அகற்றப்பட்டு விட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. தொடர்ந்து சிறுநீர் துளிகள் வெளிப்படுதல், அடிக்கடி காற்று வெளிப்படுதல், பெண்களுக்கு தொடர்ச்சியாக ஏற்படும் மாத விடாய், போன்ற நோய்களால் அவதிப்படும் மக்கள் தொழுகை நேரம் வந்தபின்பு வுது செய்து, உடனடியாக தொழுகையை ஆரம்பிக்க வேண்டும். தொழுகையில் இருக்கும் போது இந்நோயின் அசம்பாவிதங்கள் ஏதேனும் ஏற்பட்டாலும் அவர்களுடைய வுது முறியாது.

3. ஒட்டக இறைச்சி சாப்பிடுவது.

4. தன்னை மறந்த ஆழ்ந்த நித்திரைக்கு ஆளாகுதல்.

5. புத்தி மாற்றம் அல்லது சுய நினைவை இழத்தல்.

6. துணியின்றி தன் மர்ம ஸ்தானங்களை தொடுதல்.

பாடம் 21

## தயம்மம் செய்தல்

சுத்தமான மண், மணல், கல், ஆகியவற்றின் தூசியைக் கொண்டு தயம்மம் செய்ய முடியும்.

### தயம்மம் செய்யும் முறை:

1. ஒருவர் முதலில் தான் தயம்மம் செய்வதாக உள்ளத்தில் நிய்யாஹ் எனும் எண்ணம் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. இரு உள்ளங் கைகளால் மணலை அல்லது கல்லை தட்ட வேண்டும்.

3. உள்ளங் கைகளில் படிந்த தூசியால் முகத்தை ஒருமுறை தடவ வேண்டும்.

4. அதன்பின் இடது உள்ளங் கையால் வலது புறக் கையையும் வலது உள்ளங் கையால் இடது புறக் கையையும் தடவ வேண்டும்.

பாடம் 22

## குசுல் எனும் குளிப்பு கட்டாயமாகும் நிலை

1. உணர்வுடன் இருக்கும் நிலையிலோ, தூக்கத்திலோ ஒருவருக்கு விந்து வெளிப்படுதல். இந்நிலை அரபு மொழியில் ஜுனுப் எனப்படும். தன் ஆடையில் ஈரத் தன்மையை ஒருவர் காணவில்லையென்றால் குளிப்பு கட்டாயமாகாது. ஏனினும் தன் ஆடையில் ஈரத் தன்மையைக் கண்டால் விந்து வெளிப்பட்டது நினைவிருந்தாலும், இல்லாவிடினும் குசுல் எனும் பெருந் தொடக்கை விட்டும் நீக்கும் கட்டாயக் குளிப்பு கடமையாகிறது.

2. உடலுறவு கொண்ட பின் விந்து வெளிப்பட்டாலும் வெளிப் படாவிடினும் குசுல் கட்டாயமாகிறது.

3. ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்ட பின் குசுல் கட்டாயமாகிறது.

4. ஒரு பெண்ணுக்கு பிரசவம் ஏற்பட்டு 40 நாட்களுக்குப் பின் குசுல் கட்டாயமாகிறது.

5. ஒருவர் புதிதாக இஸ்லாத்தை தழுவும் போது குசுல் கட்டாயமாகிறது.

6. ஒரு முஸ்லிம் மரித்தபின் குசுல் கட்டாயமாகிறது.

பாடம் 23:

## குசுல் செய்யும் முறை

முஹம்மது (சல்) அவர்கள் குசுல் செய்த முறைப்படி ஒருவர் கடை பிடிக்க வேண்டிய பர்ளான காரியங்களையும், சுன்னத்தான காரியங்களையும் ஒன்றினைத்து பின்வருமாரு காட்டப் பட்டுள்ளன.

- குசுல் செய்வதாக உள்ளத்தில் நிய்யத்தை வைத்து பிஸ்மில்லாஹ் என்று துவங்க வேண்டும்.
- இரு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்.
- தன் மர்ம ஸ்தான உறுப்புக்களை கழுவ வைண்டும்.
- மேற் குறிப்பிட்ட முறையில் வுது செய்ய வேண்டும். இரு கால்களை கழுவுவதை கடைசி வரை பிற்படுத்த வேண்டும்.
- தலையில் மூன்று முறை நீரை ஊற்றி, சருமத்தில் தண்ணீர் படக்கூடிய முறையில் தலைமுடியை விரல்களால் குடைந்துக் கழுவ வேண்டும்.
- முதலில் வலது புறத்திலும், பின்பு இடது புறத்திலும் உடம்பில் தாராளமாக நீரை ஊற்றி, உடம்பின் சகல பகுதிகளிலும் தண்ணீர் படும் முறையில் கக்கம், செவித் தொழி, தொப்புள், விரல்களுக்கிடை போன்ற இடங்களை நன்றாகத் தேய்த்துக் கழுவ வேண்டும்.

கவணத்திற்குறிய விஷயங்கள்.

1 ஒரு ஆண் குளிக்கும் அதே முறையில் ஒரு பெண்ணும் குளிக்க வேண்டும். எனினும் ஒரு பெண் தன் கூந்தலை பின்னிக் கொண்டிருந்தால் பின்னலை அவிழ்க்க வேண்டிய அவசியமில்லை. மாறாக தன் தலைக்கு மேல் நீரை ஊற்றிக் கொண்டால் பொதுமானது.

2 குசுல் முடிந்த பின் குளியறைக்கு வெளியில் வந்து, வுது செய்தபின் ஓதக் கூடிய துஆவை ஓத முடியும்.

3 நீர் இருந்தும் அதன் அருகில் சென்றால் எதிரிகளால் அல்லது விலங்குகளால் தன் உயிருக்கோ தன் குடும்பத்தவருக்கோ அல்லது தன் செல்வத்திற்கோ அபாயம் ஏற்படும், என ஒருவர் அஞ்சினால், தயம்மம் செய்ய அவருக்கு அனுமதி உண்டு.

4 குடிப்பதற்கும், உணவு தயாரிப்பதற்கும் மாத்திரம் போதுமான அளவு நீர் தன்னிடம் இருக்கும் ஒருவர் அதனை சேமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படால், தயம்மம் செய்ய அவருக்கு அனுமதியுண்டு.

பாடம் 24

# அர்கான் அஸ் சலாஹ் - தொழுகையின் அத்தியாவசிய அம்சங்கள்

தொழுகையில் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய பர்ளான அம்சங்கள் சில உள்ளன. அவை கீழே காட்டப்பட்டுள்ளன.

1. ‘அல்-கியாம்‘. நின்று தொழுவதற்கு உடம்வில் சக்தி வாய்ந்தவர்கள் நின்று தொழ வேண்டும்.
2. ‘தக்பீர் அல் இஹ்ராம்‘. அல்லாஹு அக்பர் எனக் கூறி ஒருவர் கட்டும் ஆரம்பத் தக்பீர்.
3. ‘அல் பாதிஹா‘. சூரா ஒவ்வொரு ரகஅத்திலும் ஓத வேண்டும்.
4. ‘ருகூஉ‘ எனும் குனிந்த நிலை. இந்த நிலையில் நிற்கும் போது தலையும் முதுகும் ஒரே மட்டத்தில் இருக்க வேண்டும். கை விரல்களை விரித்து முழங் கால்களின் மேல் வைத்துக்கொள்ள வேண்டும்.
5. ருகூஉ நிலையிலிருந்து நிமிர்ந்து நிற்றல்.
6. இந்நிலையில் நிற்கும் போது முதுகெலும்பு நேராக இருக்கும் நிலையில் சிறிது தரிப்படுதல்.
7. சுஜூத் எனப்படும் நிலை. இந்த நிலையில் நெற்றியும் மூக்கு நுனியும், இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், இரு கால்களின் விரல்கள் ஆகிய ஏழு உறுப்பகளும் நிலத்தில் படக்கூடிய முறையில் சஜதா செய்ய வேண்டும்.
8. சஜதாவில் இருந்து தலையை உயர்த்தல்.
9. இரு சஜதாக்களுக்கிடையில் நேராக உட்கார்ந்திருத்தல்.
10. அத்தஹியாத் எனும் சாட்சியத்தை ஓதுவதற்கு அமர்ந்திருத்தல்.
11. அத்தஹியாத் எனும் சாட்சியத்தை ஓதல்.
12. நபி (சல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதல்.
13. இரண்டு சலாம்கள் கூறி தொழுகையை பூர்த்தி செய்தல்.
14. தொழுகையில் ஈடுபடும் ஒரு மனிதர் மனச்சாந்தியோடு, அவசர மின்றி அதனை நிறைவேற்ற வேண்டும்.

மேற்கூறியவைகள் தொழுகையின் தூண்கள் எனப்படும். இவற்றில் ஏதேனும் ஒரு அம்சத்தை நிறைவேற்ற முடியாது போனால் பிழை ஏற்பட்ட அந்த ரகஅத்தை முழுமையாக மறுபடியும் நிறைவேற்ற வேண்டும்.

ஆனால் தக்பீர் அல் இஹ்ராம் எனும் ஆரம்பத் தக்பீரை கூற மறந்தவர், அந்தத் தொழுகை முழுவதையும் மறுபடியும் நிறை வேற்ற வேண்டும்.

பாடம் 25

## தொழுகையின் நிபந்தனைகள்

ஒருவர் தொழுகையை தொடங்கு முன் நிறைவேற்ற வேண்டிய அவசியமான நிபந்தனைகள் சில உள்ளன. அவை பின்வருமாரு.

1. ஒருவர் முஸ்லிமாக இருக்க வேண்டும். இறை நம்பிக்கை அற்றவர்கள் வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மது (சல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதித் தூதர் என்றும், விசுவாசம் கொண்டு சாட்சி கூறும்வரை அவருடைய தொழுகை ஏற்கப்படாது.
2. அந் நிய்யாஹ். தொழுகையை நிறைவேற்றப் போவதாக உள்ளத்தில் எண்ணம் இருக்க வேண்டும்.
3. சுத்தம். இது உடல் சுத்தம், ஆடைசுத்தம், தொழுகை நடத்தும் இடத்தின் சுத்தம், ஆகியவைகளை குறிக்கும்.
4. தொழுகைக்கு முன் பெருந்தொடக்கை, சிறு தொடக்கை ஆகியவைகளில் இருந்து நீங்கி சுத்தமாக இருக்க வேண்டும்.
5. உடம்பில் கட்டாயமாக மறைக்க வேண்டிய ஸ்தானங்களை மறைத்தல். ஆண்கள் தொப்புளிலிருந்து முழங்கால் வரையும் எல்லாப் புறங்களிலும் மறைக்க வேண்டும். பெண்கள் முகத்தையும் மணிக்கட்டு வரை கைகளையும் தவிர உடம்பின் ஏனைய பாகங்களை மறைக்க வேண்டும். எனினும் அருகில் ஆண்கள் இருப்பின் உடம்பின் சகல பாகங்களையும் முழுமையாக மறைக்க வேண்டும்.
6. கிப்லாவை முன் நோக்க வேண்டும். அதாவது தொழும் மனிதர் மக்காவில் உள்ள கஅபாவின் திசையை நோக்கித் தொழ வேண்டும். கிப்லா இருக்கும் திசையை சரியாக அறிய முடியாத சந்தர்ப்பத்தில் முடிந்தவரை சரியான திசையை ஊகித்து அத்திசையை நோக்கித் தொழவேண்டும்.
7. உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

பாடம் 26

## தொழுகையின் வாஜிபான அம்சங்கள்

தொழுகையில் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய மேலே குறிப்பிட்ட பர்ளான 14 அம்சங்களைத் தவிர மேலும் சில வாஜிபான அம்சங்களும் உள்ளன. அவை கீழே காட்டப்பட்டுள்ளன.

1. தக்பீர் அல் இஹ்ராமைத் தவிர ஏனைய தக்பீர்களை கூறல்.

2. ருகுஉ நிலையில் 'ஸுப்ஹான ரப்பியல் அழீம் வபி ஹம்திஹி' என ஒருமுறை கூறல்.
3. ருகுஉவில் இருந்து எழும்போது 'சமி அல்லாஹு லிமன் ஹமிதா' எனக் கூறல். இதனை இமாமாக நிற்பவரும் தனிமையில் தொழுபவரும் கூற வேண்டும்.
4. ருகுஉவில் இருந்து எழுந்த பின் 'ரப்பனாா லகல் ஹம்து' எனக்கூறல். இதனை இமாம் அவருக்கு பின் நின்று தொழுபவர்கள், மற்றும் தனிமையில் தொழுபவர், ஆகிய அனைவரும் கூற வேண்டும்.
5. ஸஜதாவில் இருக்கும் போது 'ஸுப்ஹான ரப்பியல் அ.'.லா' எனக்கூறல்.
6. இரண்டு ஸஜதாவுக்கும் இடையில் அமரும் போது 'ரப்பி.'.பிர்லி' எனக்கூறல்.
7. ளுஹர், அஸர், ம.'.ரிப், இஷா ஆகிய நேரங்களில் முதலிரண்டு ரகஅத்துகளின் முடிவில் தஷ்ஷஹுது ஓத உட்காருதல்.
8. மேற்கூறிய தொழுகை நேரங்களில் இரண்டாவது ரகஅத்தின் பின் தஷ்ஷஹுது எனும் சாட்சியத்தை கூறல்.

மேற் குறிப்பிட்ட எட்டு அம்சங்களும் தொழுகையின் வாஜிபான கருமங்களாகும். இவற்றில் எதையேனும் செய்ய மறந்தால் தொழுகையின் முடிவில் இரண்டு ஸஜதாக்கள் செய்வதன் மூலம் தொழுகை முழுமை பெறும். ஏனினும் யாரேனும் வேன்றுமென்று இக்கருமங்களில் ஒன்றை கைவிட்டால் அவர் தொழுகையை மறுபடியும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

தஷ்ஹுது ஓதும் முறை.

'அத்தஹிய்யாத்து லில்லாஹி வ சலவாத்து வ தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹு. அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல் லா இலாஹ இல் அல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸுலுஹு.'

பொருள்: கண்ணியங்கள், வணக்கங்கள், வாழ்வின் நற்கருமங்கள் யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! சாந்தியும், அல்லாஹ்வின் நல்அருளும், நல் ஆசிகளும் உங்கள் மீது உண்டாவதாக. எங்கள் மீதும், ஏனைய நல்லடியார்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலாம் உண்டாவதாக. வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வை தவிர யாருமில்லை என சாட்சி கூறுகிறேன். மேலும் முஹம்மது (சல்) அவர்கள் அல்லாஹ்வின் அடிமையும், தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

'அல்லாஹுஃம்ம சல்லி அலா முஹம்மத் வ அலா ஆலி முஹம்மத் கமா சல்லைத்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம். இன்னக ஹமீதுன் மஜீத். வ பாரிக் அலா முஹம்மத் வ அலா ஆலி முஹம்மத் கமா பாரக்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத்.'

பொருள்:

யா அல்லாஹ்! இப்லாஹீம் (அலை) மீதும், அவர்களின் குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிந்தது போல் முஹம்மத் (சல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தினர்கள் மீதும் அருள் புரிவாயாக. இப்ராஹீம் (அலை) மீதும், அவர்களின் குடும்பத்தினர் மீதும் நீ பரக்கத் புரிந்தது போல் முஹம்மத்(சல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தினர்கள் மீதும் பரக்கத் புரிவாயாக.

பாடம் 27

## தொழுகையின் சுன்னத்தான அம்சங்கள்

1. 'இஸ்திப்தா' எனும் ஆரம்ப துஆ ஓதல். *'ஸுப்ஹானக அல்லாஹுஃம்ம வபி ஹம்திக வ தபாரக இஸ்முக வ தஆலா ஜத்துக வ லாஇலாஹ ஐருக.'* பொருள்: *சகல புகழும், கீர்த்தியும் அல்லாஹ்வுக்கே உரியன. உன்னுடைய திருநாமம் பாக்கியம் பெற்றதாகும். உன்னுடைய கீர்த்தியும், மகிமையும் மேலும் உயர்ந்து ஓங்கட்டும். வணக்கதிற்கு உரிய இறைவன் உன்னைத் தவிற வேறு யாருமில்லை.'* தொழுகையின் ஆரம்பத்தில் ஓதும் இது போன்ற வேறு வசனங்களும் உள்ளன.

2. வலது கையை இடது கை மணிக்கட்டின் மீது வைத்து, இரு கைகளையும் மார்பின் மீது வைத்தல்.

3. பின்வரும் சந்தர்ப்பங்களில் இரு கைகளையும் தோள் புஜங்கள் அல்லது காதுகள் வரை உயர்த்தல்.
   - ஒருவர் தக்பீர் அல் இஹ்ராம் கூறும்போது. (ஆரம்ப தக்பீர்)
   - ருகுஉ செய்யக் குனியும் போது.
   - ருகஉ நிலையிலிருந்து எழுந்து நிமிரும் போது.
   - முதலாம் அத்தஹியாத்து முடிந்து மூன்றாம் ரகஅத்துக்காக எழும் போது.

4. ருகுஉ நிலையில் இருக்கையில் ஒரு முறைக்கு மேல் 'ஸுப்ஹான ரப்பியல் அழீம் வபி ஹம்திஹி' எனக் கூறல்.

5. சூரா அல் பாதிஹா ஓதி முடிந்த பின் ஆமீன் கூறல்.
6. 'அஊது பில்லாஹி மின் அஷ் ஷைத்தானிர் ரஜீம்' 'பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்' ஓதுதல்.
7. இரு ஸஜதாவுக்கும் இடையில் அமரும் போது 'ரப்பி∴பிர்லி' என ஒரு முறைக்கு மேல் கூறல்.
8. ருகுஉ நிலையில் இருக்கையில் தலையையும், முதுகையும் ஒரே சமமான உயரத்தில் வைத்தல்.
9. ஸஜதா நிலையில் இருக்கும் போது இரு கைகளும் விலாப்பக்கங்களை தொட்டுக் கொண்டும், வயிறு துடையை தொட்டுக் கொண்டும், துடைகள் கால்களை தொட்டுக் கொண்டும் இல்லாத முறையில் உடலுருப்புளை சற்று அகற்றி சஜதா செய்தல்.
10. சஜதா செய்யும் போது இரு முழங்கைகளையும் நிலத்தில் படாதவாறு உயர்த்தல். *'உங்கள் கைகளை நாய்களைப் போல் நிலத்தில் நீட்டி வைக்காதீர்கள்'* என முஹம்மது நபி (சல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.
11. முதலாவது அத்தஹியாத்திலும், இரண்டு சஜதாக்களுக்கு இடையின் நடு இருப்பிலும், இரண்டு ரகஅத்துக்களைக் கொண்ட பஜர் போன்ற தொழுகையின் இறுதியிலும் வலது பாதத்தை நேராக நாட்டி இடது காலின் மீது உட்காருதல்.
12. 'அத் தவர்ருக்'. இடது பாதத்தை வலது காலின் கீழ் நுழைத்து, தன் இடது பின்புறம் நிலத்தில் இருக்குமாறு சமைந்த இருப்பில் அமரும் நிலை இதுவாகும். ளுஹர், அஸர், ம∴ரிப், இஷா ஆகிய தொழுகைகளில் இறுதி அத்தஹிய்யாத்து ஓதும் போது இவ்வாறு அமர்வது சிறப்பான செயலாகும்.

பாடம் 28

## தொழுகையை முறிக்கும் செயல்கள்

1. பேசினால் தொழுகை முறியும் என அறிந்தும் வேண்டுமென்று பேசுதல்.
2. சிரித்தல்.
3. சாப்பிடுதல்.
4. பருகுதல்.
5. மறைக்க வேண்டிய உடலுறுப்புகள் வெளிப்படுதல்.

6. கிப்லாவின் திசையை விட்டும் திரும்புதல்.

7. தொழுகைக்கு சம்பந்தமற்ற மேலதிகமான செயல்களையோ, மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடிய செயல்களையோ செய்தல்.

8. வுது முறையும் காரியங்கள் ஏதேனும் நடைபெறல்.

9. தொழுகையின் அத்தியாவசியமான தூண்களில் எதையேனும் செய்யாது விடுதல். உதாரணம் உடல்வலு இருக்கையில் நின்று தொழுவது, அல் பாதிஹா ஓதுவது போன்றன.

பாடம் 29

## மறதிக்காக செய்யும் சஜதா (சஜதா ஸஹு)

மனிதர்களாகிய எங்களுக்கு பிழைகளும் மறதியும் ஏற்படுவது இயற்கையே. மேற் குறிப்பிட்டவாறு தொழுகையின் பர்ளான அல்லது வாஜிபான அம்சங்களை நிறைவேற்றுவதில் தவறு ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய தொழுகையின் முடிவில் 'சஜதா ஸஹு' எனும் மறதிக்காக செய்யும் சஜதா செய்ய வேண்டும். எனினும் தொழுகையின் பர்ளான ஒரு செயலை செய்யாது விட்டால் அச்செயலை மீண்டும் நிறைவேற்ற வேண்டும்.

மறதியின் காரணமாக ஏற்படக் கூடிய நான்கு பிரதானமான பிழைகள்.

- தொழுகையில் கூடுதலான ஒரு செயலைச் செய்தல். உதாரணமாக ளுஹர் தொழுகையில் 4 ரகஅத்துக்கு பதிலாக 5 ரகஅத்து மறதியாகத் தொழுதால், தொழுகையின் முடிவில் சலாம் கூறிய பின்பு இரண்டு சஜதா ஸஹு செய்ய வேண்டும்.
- தொழுகையில் ஒரு ரகஅத்து குறைத்துச் செய்தல். உதாரணமாக ளுஹர் தொழுகையில் 4 ரகஅத்துக்கு பதிலாக 3 ரகஅத்து மறதியாகத் தொழுது ஒருவர் சலாம் கூறினால் விடுபட்ட ரகஅத்தை மீண்டும் தொழுது, அதில் சலாம் கூறுவதற்கு முன் இரு சஜதா ஸஹு செய்ய வேண்டும்.
- தொழுகையில் ஒரு செயலை கூட்டியும், இன்னொரு செயலைக் குறைத்தும் செய்திருந்தால் கடைசி சலாம் கூறுவதற்கு முன் இரு சஜதா ஸஹு செய்ய வேண்டும்.

- தன் தொழுகையில் ஏதேனும் ஒரு செயலை கூட்டியதாகவோ, குறைத்துச் செய்ததாகவோ ஒருவருக்கு சந்தேகம் ஏற்பட்டால் அவர் பாதுகாப்புக்காக குறைத்துச் செய்ததாகக் கருதி கடைசி சலாம் கூறுவதற்கு முன் இரு சஜதா ஸஹ்வு செய்ய வேண்டும்.

சஜதா ஸஹ்வு செய்ய வேண்டிய தெளிவான சில சந்தர்ப்பங்கள்.

தொழுகையின் பர்ளான செயல் (ஒரு தூண்) விடுபட்டால்.

1. உதாரணம். ஒரு மனிதருக்கு ருகூஉ நிலைக்கு போகும் போது அல்லது போகு முன் தான் அல் பாதிஹா சூரா ஓத மறந்த விஷயம் நினைவு வந்தால், அவர் ருகூஉக்கு போகாமல் சூரா பாதிஹாவையம் மேலும் சில குர்ஆன் வசனங்களையும் வழமை போல் ஓத வேண்டும். சில வேளைகளில் இரண்டாவது ரகஅத்தில் நிற்கும் போது சூரா பாதிஹா முதல் ரகஅத்தில் ஓத மறந்த விஷயம் ஞாபகத்திற்கு வந்தால் பிழை ஏற்பட்ட ரகஅத்தை ஒதுக்கி அதற்குப் பகரமாக மேலதிகமாக ஒரு ரகஅத்தை தொழ வேண்டும். தொழுகையின் முடிவில் சலாம் சொன்ன பிறகு இரண்டு சஜதா ஸஹ்வு செய்து மீண்டும் இரு சலாம்கள் கூற வேண்டும்.
2. அத்தஹியாத்து நிலையில் அமர்ந்த ஒருவருக்கு அதே ரகஅத்தில் இரு சஜதாவுக்குப் பதிலாக தான் ஒரு சஜதா மாத்திரம் செய்ததாக நினைவு வந்தால் உடனடியாக விடுபட்ட சஜதாவைச் செய்து மீண்டும் அத்தஹிய்யாத் ஓத வேண்டும். மாறாக முந்திய ரகஅத்தில் ஒரு சஜதா மாத்திரம் செய்ததாக நினைவு வந்தால் அந்த ரகஅத்தை முழுமையாக மீண்டும் நிறைவேற்றி, தொழுகையின் முடிவில் சலாம் சொன்ன பிறகு இரண்டு சஜதா ஸஹ்வு செய்து மீண்டும் இரு சலாம்கள் கூற வேண்டும்.

மேற் குறிப்பிட்ட இரு உதாரணங்களும் தொழுகையின் தூண்களில் ஒன்று விடு பட்டால் அதனை நிவர்த்தி செய்யும் முறையாகும். *இச் சந்தர்ப்பங்களில் மறதியின் காரணமாக விடுபட்ட செயலை மீண்டும் செய்வதோடு மேலதிகமாக இரண்டு சஜதா ஸஹ்வும் செய்ய வேண்டும்.*

தொழுகையின் வாஜிபான செயல் விடுபட்டால்.

தொழுகையின் வாஜிபான ஒரு செயலை மறதியாக விட்டவர் அதற்குப் பகரமாக இரண்டு சஜதா ஸஹ்வு மாத்திரம் செய்தால் போதுமானது. அவர் அச்செயலை அல்லது பிழை ஏற்பட்ட

ரகஅத்தை மீண்டும் செய்ய வேண்டிய அவசியமில்லை. அதாவது தொழுகையின் இன்னொரு கட்டத்தில் இருக்கும் போது வாஜிபான ஒரு செயலை முந்திய ரகஅத்தில் செய்ய மறந்த விஷயம் ஒருவருக்கு நினைவு வந்தால் அவர் அந்த செயலை மீண்டும் செய்ய வேண்டியதில்லை. மாறாக தன் தொழுகையை தொடர்ந்து நடத்தி முடிவில் சலாம் கூறு முன் இரண்டு சஜதா ஸஹு செய்து அதன் பிறகு சலாம் கூற வேண்டும்.

தொழுகையின் சுன்னத்தான செயலை விடுபட்டால்.

சுன்னத்தான செயல் ஒன்றை விடுபட்டால் அதனை மீண்டும் செய்யவோ, அதற்குப் பகரமாக சஜதா ஸஹு செய்யவோ எவ்வித அவசியமுமில்லை.

பாடம் 30

## சகாத் எனும் வரி

இஸ்லாத்தின் தூண்களில் சகாத் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். இதன் மூலம் பல நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

1. சமுதாயத்தில் ஏழைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய சகாத் உதவுகிறது.
2. தமக்கு நன்மை செய்பவர்கள் மீது பற்றுதல் ஏற்படுவது இயல்பாகும் என்பதால், சமூகத்தில் வரியவர்கள் செல்வந்தர் களுக்கிடையில் நல்லுறவு வலுவடைய வாய்ப்பு ஏற்படுகிறது.
3. மனிதனுக்கு இயற்கையாக உள்ள பேராசையையும், கஞ்சத் தனத்தையும் விட்டு நீங்கவும், மற்றவர்களுக்காக தியாகம் புரிந்து தன்னை புனிதப் படுத்தவும் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.
4. மனிதனுல் தாராள மனப்பான்மையை வளர்ப்பதோடு வசதியற்ற வர்கள் மீது அனுதாபம் ஏற்பட சூழ்நிலை ஏற்படுகிறது.
5. மனிதர்கள் மீது அல்லாஹ்வின் அருள் பொழியவும், செல்வம் பெருகவும், நிறைவு பெறவும் காரணமாகிறது.

கீழ் வரும் நான்கு வகை சொத்துக்களின் மீது சகாத் கடமையாகிறது.

1. பூமியிலிருந்து அறுவடை பெறும் தானியங்கள், பழங்கள் முதலியன.
2. மேய்ச்சலுக்கு விடும் கால் நடைகள்.

3. தங்கமும் வெள்ளியும்.
4. வியாபாரப் பொருட்கள்.

இத்தகைய செல்வங்களிலிருந்து சகாத் செழுத்த வேண்டிய குறைந்த பட்ச எல்லை 'நிஸாப்' எனப்படும். நிஸாப் எனும் எல்லைக்கு மேலதிகமாக உள்ள செல்வங்கள் மீது சகாத் செலுத்த வேண்டும். நிஸாப் எல்லைக்கு குறைவான செல்வங்கள் மீது சகாத் செலுத்த வேண்டியதில்லை.

நிலத்திலிருந்து பெறும் அறுவடைகள்.

தானியங்கள், கோதுமை, அரிசி, பழங்கள், ஈத்தம் பழம், திராட்சை, பார்லி முதலியவற்றுக்கு நிஸாப் எல்லை ஐந்து வஸக்காகும். ஒரு வஸக் என்பது ஏறக்குறைய 675 கிலோ கிராம் ஆகும்.

முழைநீர், வாய்க்கால், நீர்ஊற்றுக்கள் போன்ற இயற்கை வழிகளின் மூலம் விவசாயத்துக்கு தேவையான நீரைப் பெற்றிருந்தால் அறுவடையில் 10 சதவீதம் சகாத் செலுத்த வேண்டும்.
இயந்திரங்கள் மற்றும் மனிதனின் சிரமத்தின் மூலம் நீர்ப்பாசனம் செய்திருந்தால் முழு அறுவடையில் 5 சதவீதம் சகாத் செலுத்த வேண்டும்.

இப்புத்தகத்தில் சகாத்தைப் பற்றிய சுருக்கமான விபரங்களை மாத்திரம் குறிப்பிடுவதால் கால் நடைகள் மீது செலுத்த வேண்டிய சகாத் அளவு இங்கு விவரிக்கப்படவில்லை. அவற்றை அறிய விரும்புவர்கள் நபி (சல்) அவர்களின் ஹதிஸ் கலையை கற்றறிந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர்களிடம் சென்று தமக்குத் தேவையான விஷயங்களை அறிய முடியும்.

தங்கம், வெள்ளி, பணம் முதலியன.

வெள்ளியின் மீது குறைந்த பட்ச நிஸாப் ஆகிய 140 மித்கால் என்ற எல்லையை அடையும் போது அதற்குறிய சகாத் தொகையை செலுத்த வேண்டும். 140 மித்பால் என்பது சுமார் 595 கிராமுக்கு சமமாகும்.

தங்கத்தின் மீது குறைந்த பட்ச நிசாப் 92 கிராமுக்கு சமமாகிய 20 மித்கால் என்ற தொகையாகும்.

மேற் கூறிய நிஸாப் எல்லைக்கு சமமான தங்கம் அல்லது வெள்ளி ஒருவரிடம் சேர்ந்து ஒரு வருடம் கடந்தால் அவர் முழுத் தொகையின் பெறுமதியில் 40ல் ஒரு பாகம் அல்லது 2.5 சதவீதம் சகாத் செலுத்த வேண்டும்.

தங்கம் அல்லது வெள்ளியின் மீது குறிப்பிட்ட நிஸாப் அளவு பணம், காசு ஆகியவைகளுக்கும் உண்டு. அதனால் 92 கிராம் தங்கத்தின் தற்போதைய விற்பனை விலைக்குச் சமமான அளவு பணம் ஒருவர் கைவசம், ஒரு வருட காலம் இருந்தால் முழுத் தொகையில் 2.5 விகிதம் சகாத் செலுத்த வேண்டும்.

வியாபாரத்தில் பெறும் லாபத்திற்கு சகாத் கணக்கிடும் போது ஒரு வருடம் கடக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. மாறாக வியாபாரத்தில் முதலீடு செய்த தொகை நிஸாப் எல்லைக்கு சமமாக இருந்து ஒரு வருடம் கழிந்திருந்தால், முதலீடு செய்த தொகையுடன் லாபத்தையும் சேர்த்து மொத்தத் தொகையில் 2.5 சத விகிதம் சகாத் செலுத்த வேண்டும். அதே போன்று ஒருவரிடம் உள்ள கால்நடைகள் நிஸாப் எல்லைக்குச் சமமாக அல்லது எல்லையை கடந்து ஒரு வருடம் பூர்த்தியாகி இருந்தால் புதிதாகப் பிறந்த குட்டியையும் அத்துடன் சேர்த்து மொத்தத் தொகையில் சகாத் செலுத்த வேண்டும். கன்று அல்லது குட்டி பிறந்த கால எல்லை கணக்கிலடங்காது.

தமது சொந்த உபயோகத்துக்கு அல்லது இரவல் கொடுப்பதற்காக வைத்திருக்கும் பெண்களின் நகைகளுக்கு அவை நிஸாப் எல்லையை அடைந்திருந்தால் அவற்றின் மீதும் சகாத் செலுத்த வேண்டுமென மார்க்க அறிஞர்கள் பின்வரும் ஹதீசைக் குறிப்பிடுகிறார்கள்.

*'தங்கம் அல்லது வெள்ளியின் சொந்தக்காரர் அவற்றுக்குரிய சகாத்தை செலுத்தாவிட்டால் அனைவரும் விசாரனைக்காக எழுப்பப்படும் நாளில் அவருக்காக அவைகள் நெருப்புத் தகடுகளாக தயாரிக்கப்படும். அவைகளை நரக நெருப்பில் சூடு காட்டி அவருடைய நெற்றியிலும் இரு புறங்களிலும் முதுகிலும் அடையாளமிடப்படும். அவைகளின் சூடு குறையும் போது மீண்டும் சூடாக்கப்பட்டு ஐம்பதாயிரம் வருடங்களுக்குச் சமமாகிய ஒவ்வொரு நாளிலும் அனைவர் மீதும் தீர்ப்பு கூறப்படும் வரை இத்தண்டனை நடைபெறும். அதன் முடிவில் தன்னுடைய வழி சொர்க்கத்திற்கா அன்றி நரகத்திற்கா என அவர் அறிந்துக் கொள்வார்.'*

அம்ர் பின் ஷுஐப் பின்வருமாறு தெரிவிக்கிறார்கள். *'ஒரு முறை நபி (சல) தங்கக் காப்புகளை மகளின் கைகளில் அணிவித்திருந்த ஒரு பெண்ணைக் கண்டு, 'அவற்றுக்குரிய சகாத்தை செலுத்தி விட்டீர்களா?' எனக் கேட்டார்கள். அப்பெண் இல்லை என பதில் கொடுத்த போது, 'இத் தங்கக் காப்புக்கு பதிலாக நெருப்பினால் செய்த காப்பை அல்லாஹ் உங்கள் கையில் போடுவதை நீங்கள் விரும்புவீர்களா?' எனக் கேட்டார்கள். உடனே அப்பெண் அவற்றை கழற்றி வைத்துவிட்டாள்.'* ஆதாரம் அத் தலாதா. (மூவர்)

உம் சலாமா (ரலி) அவர்கள் ஒரு முறை தங்கச் சிலம்பு அணிந்திருக்கையில் நபி (சல்) அவர்களிடம் 'அல்லாஹ்வின் தூதரே இவை 'கான்ஸ்' (பதுக்கி வைத்த செல்வங்கள்) ஆகுமா? என வினவினார்கள். அதற்கு நபி (சல்) அவர்கள் 'அவற்றுக்குறிய சகாத்தை செலுத்தியிருந்தால் அவை கான்ஸ் (பதுக்கிய செல்வங்கள்) ஆகாது' என பதிலளித்தார்கள்.

இத்தீர்ப்பை சுட்டிக்காட்டும் வேறு சில ஹதிஸ்களும் உள்ளன.

| செல்வ வகைகள் | நிஸாப் அளவு | ஸகாத் அளவு | குறிப்பு |
|---|---|---|---|
| தங்கம் | 92 கிராம் | 2.5 சதவிகிதம் | சொந்த பாவனை |
| வெள்ளி | 595 கிராம் | 2.5 சதவிகிதம் | சொந்த பாவனை |
| பணம் | தங்க விலையின் மதிப்பீட்டு அளவு | 2.5 சதவிகிதம் | சந்தை விலை |
| நிலத்திலிருந்து பெற்ற அறுவடை | 675 கிலோ கிராம் | 5 சதவிகிதம் | சுய முயற்சியால் செய்த நீர்பாசனம் |
| நிலத்திலிருந்து பெற்ற அறுவடை | 675 கிலோ கிராம் | 10 சதவிகிதம் | இயற்கையாகக் கிடைத்த நீர்பாசனம் |
| வியாபாரப் பொருட்கள் | தங்க விலையின் மதிப்பீட்டு அளவு | 2.5 சதவிகிதம் | அத்தினத்தின் வர்த்தக விலை |

சொந்தப் பாவனைக்கும் இரவல் கொடுக்கவும் வைத்துள்ள தங்க நகைகளுக்கு சகாத் செலுத்த வேண்டியதில்லை என சில மார்க்க அறிஞர்கள் பின்வரும் காரணங்களைக் கொண்டு அபிப்பிராயம் கூறுகிறார்கள்.

- 'பெண்கள் அணியும் தங்க நகைகளுக்கு சகாத் செலுத்த வேண்டியதில்லை' எனக் குறிப்பிடும் ஒரு ஹதிஸ் உண்டு. எனினும் ஹதிஸ் கோவையில் குறிப்பிடப்பட்ட ஒருவர் நம்பிக்கைக்குரியவரல்ல என்ற கருத்துண்டு.

- பெண்கள் அணியும் நகைகளுக்கு சகாத் கிடையாடு என அனஸ், ஜாபிர், இப்னு உமர், ஆயிஷா, அஸ்மா (ரலி) போன்றவர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள்.
- *'ஒரு முஸ்லிம் தன் அடிமை மீதும் தன் குதிரை மீதும் சதக்கா கொடுக்க வேண்டியதில்லை'* என்ற ஹதிஸை அபு ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆதாரம் புஹாரி. இந்தத் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு ஒரு ஆணுக்கு அடிமையும், குதிரையும் அவசியமாக இருப்பது போல ஒரு பெண்ணுக்கு தங்க நகைகள் இருப்பதன் அவசியம் சமமாகும் என்ற கருத்தை சில மார்க்க அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள்.

எனினும் பெண்களுடைய நகைகளுக்கு சகாத் செலுத்த வேண்டும் என்ற கருத்து குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் கூடுதலான பொருத்தமாக இருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

வர்த்தகப் பொருட்களும் காணிகளும்

வியாபாரத்திற்காக உள்ள பொருட்களின் சொந்தக்காரர் ஒவ்வொரு வருட முடிவிலும் அவற்றின் பெருமதியை கணிக்கும் போது அவற்றின் தற்போதைய சந்தை விலையில் கணக்குப் பார்த்து அவற்றின் மீது 2.5 சதவிகிதம் சகாத் செலுத்த வேண்டும். அப்பண்டங்களின் (வாங்கிய) கொள்விலை தற்போதைய சந்தை விலையைவிட கூடுதலாகவோ குறைவாகவோ அல்லது சமமாகவோ இருப்பினும் சகாத் கணக்கை கணிப்பதை எல்லளவும் பாதிக்காது.

அல்லாஹ்வின் தூதர் (சல்) அவர்கள் *'வியாபாரத்திற்காக நீங்கள் எதை தயாரித்த போதும் அதற்குரிய சகாத்தை செலுத்துங்கள்'* என எங்களுக்கு உபதேசித்தார்கள்.' என்ற ஹதிஸை சமுரா (ரலி) தெரிவிக்கிறார்கள். ஆதாரம் அபுதாவுத்.

விற்பனைக்காக கொள்வனவு செய்யும் காணிகள், கட்டடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் உற்பட விற்பனைக்காக வாங்கிய ஏனைய பண்டங்கள், பொருட்கள் யாவும் வியாபாரப் பொருட்கள் எனக் கருதப்படும்.

வாடகைக்குக் கொடுப்பதற்கு கட்டப்படும் கட்டடங்களின் மீது சகாத் வரி இல்லையெனினும் வாடகை பணத்திலிருந்து ஒரு வருடம் கழிந்த பின் சகாத் செலுத்த வேண்டும். அதே போன்று சொந்த உபயோகத்திற்கும், வாடகைக்கு விடுவதற்கும் வாங்கிய வண்டி களின் மீது சகாத் செலுத்த வேண்டியதில்லை. சொந்த செலவு, திருமணச் செலவு, அல்லது கடனை அடைக்க, அல்லது காணி வாங்குவதற்கு, அல்லது வேறேதேனும் காரணங்களுக்காக சில

காலங்களாக சேகரித்து வைத்த வாடகைப் பணம் நிஸாப் எல்லையை அடைந்து ஒரு வருடம் கழிந்தால் அத்தொகையின் மீது சகாத் செலுத்த வேண்டும் என்பது இஸ்லாமிய ஷரியா சட்டமாகும். கடன் அடைக்க வேண்டும் எனக் காரணம் காட்டி சகாத் செலுத்தாமல் இருக்க இஸ்லாமிய ஷரியாவின்படி இடமில்லை, என்பது மார்க்கத்தை கற்றறிந்த அறிஞர்களின் அபிப்பிராயமாகும்.

அதே போன்று பெற்றோரை இழந்த அனாதைகளுக்கும், பகுத்தறிவு குறைந்கவர்களுக்கும் சொந்தமான செல்வங்கள் இருந்து அவை நிஸாப் எல்லையை அடைந்தால் சகாத் செலுத்தாமல் இருக்க முடியாது. இங்கு சகாத்தை கணக்கிட்டு அதனை செலுத்த வேண்டிய பொருப்பு அவர்களுக்கு பொறுப்பாகக் கடமையாற்றும் பாதுகாவலர்களின் மீது ஏற்படுகிறது.

சகாத்தைப்பெற தகுதி உடையவர்கள் யாரென்பதை பின்வருமாரு புனித குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் விளக்குகிறான். *'தர்மங்களெல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அதற்காக (வசூல் செய்வது கணக்கிடுவது போன்ற வேலைகளில்) உழைப்பவர்களுக்கும், (புதிதாக இஸ்லாத்தை தழுவியோரில்) எவர்களின் இதயங்கள் அன்வு செலுத்தப்பட வேண்டுமோ அத்தகை யோருக்கும், இன்னும் (அடிமைகளின்) பிடரிகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையி(ல்செலவழிப்பதி)லும். வழிப்போக்கருக்கும் உரித்தான தாகும். (இது) அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும்; மேலும் அல்லாஹ் நன்கறிந்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.'* 9:60

அல்லாஹ் குறிப்பிட்ட இந்த எட்டு கூட்டத்தினரில் மாற்றம் செய்யவோ அவற்றில் எதையேனும் கூட்டவோ குறைக்கவோ எவருக்கும் அதிகாரம் கிடையாது. ஏனெனில் அல்லாஹ் நன்கறிந்தவன்; தீர்க்கமான அறிவுடையவன்.

பாடம் 31

## ஒரு முஸ்லிமின் மரணக்கிரியைகள் செய்யும் முறை

பின்வரும் முறையில் இறந்தவரின் உடலை தயார் செய்ய வேண்டும்.

1. ஒருவரின் உயிர் பிரிந்து விட்டதென்று உறுதியாகி விட்டால் இறந்தவரின் கண்களை கசக்கி மூட வேண்டும். தாடை திறந்து

விடாத வண்ணம் ஒரு புடவைத் துண்டால் இறுகக் கட்டப்பட வேண்டும்.

2. இறந்தவரின் உடலை கழுவும் போது அவரது அவ்ரா எனும் மர்ம ஸ்தானங்களை மறைக்க வேண்டும். உடம்பின் மேற் பகுதியை சிறிது உயர்த்தி வயிற்றை இலேசாக அழுத்தி உடம்பில் எஞ்சியிருக்கக் கூடிய அசுத்தங்களை வெளியாக்க வேண்டும். உடம்பைக்கழுவும் மனிதர் தன் கைகளில் துணியை சுற்றிக் கொண்டு இறந்தவரின் உடம்பிலிருந்து வெளிப்பட்ட அசுத்தங்களை அகற்றி சுத்தப்படுத்த வேண்டும். மரித்தவரின் உடலை வுது செய்வது போல் முதலில் கழுவ வேண்டும். தலையையும் தாடியையும் இலந்தை மர (ஸித்ர்) இலைகள் அல்லது சவர்க்காரம் பாவித்து, நீரால் முதலில் உடலின் வலப்புறத்தையும் பின்னர் இடப்புறத்தையும் கழுவ வேண்டும். இம்முறையில் மூன்று தடவை உடம்பை கழுவமுடியும். கடைசி முறையில் ஒன்றும் கலக்காத சுத்தமான நீரைக் கொண்டு கழுவ வேண்டும்.

ஒவ்வொரு முறை கழுவும் போதும் வயிற்றை லேசாக அழுத்த வேண்டும். உடம்பிலிருந்து ஏதேனும் வெளிப்பட்டால் அதனைக் அகற்றி உடலைக் கழுவி சுத்தம் செய்து மலவாசலை பஞ்சினால் அடைக்க வேண்டும். அதனால் பயனில்லாவிட்டால் களிமண் அல்லது வைத்தியர்கள் உபயோகிக்கும் பிளாஸ்தர் போன்ற ஏதாவதொன்றால் மூட வேண்டும். அதன் பின் மீண்டும் வுது செய்ய வேண்டும்.

மூன்று முறை கழுவிய பின்பும் உடம்பில் சுத்தம் ஏற்பட வில்லையென்றால் ஐந்து அல்லது ஏழு முறை கழுவலாம். உடலை ஒரு துணியால் துடைத்து மறைவான ஸ்தானங்களிலும் சஜதா செய்யும் போது நிலத்தில் படும் ஸ்தானங்களிலும் வாசனைகள் பூச வேண்டும். உடம்பு முழுவதற்கும் மையத்தை வைக்கும் பெட்டிக்கும் மரங்களிலிருந்து பெறும் சந்தனம் போன்ற வாசனைகளைப் பூசுவது விரும்பத் தக்கது. நகத்தை வெட்டி மீசையை குறைக்கலாம். ஏனினும் தலைமுடியை சீவக் கூடாது. பெண்ணின் மையத்தென்றால் கூந்தலை மூன்றாக பிரித்து சடை பின்னி தலையின் பின்புறத்தில் வைக்க வேண்டும்.

3. இறந்தவருக்கு கபன் செய்தல்.

ஆணின் உடம்பை சட்டையோ தலைப்பாகையோ இன்றி மூன்று வெள்ளைப் புடவைத் துண்டுகளால் சுற்றிக் கட்டுவது சிறந்தது. அதுவன்றி ஒரு துண்டை மேற் சட்டையாகவும் ஒரு துண்டை

இடுப்பில் சாரமாகவும் அணிவித்து மற்றத்துண்டை சுற்றிக் கட்டவும் உபயோகிக்க முடியும்.

ஒரு பெண்ணின் உடம்பை ஐந்து துண்டுகளால் கபன் செய்ய வேண்டும். திர் எனும் இறுக்கமற்ற மேலாடை, முகத்தை மறைக்க ஒரு துண்டு, இடுப்பைச் சுற்றி ஒரு துண்டு ஆகியவைகளை அணிவித்து இரண்டு அல்லது மூன்று துண்டுகளால் உடலை சுற்றிக் கட்டவேண்டும். இளம் பெண்களின் சடலத்துக்கு மேற்சட்டை அணிவித்து இரண்டு புடவை துண்டுகளால் உடலை சுற்றிக் கட்டவேண்டும்.

4. ஒரு ஆணின் மையத்தைக் கழுவவும், தொழுகையை நடத்தவும் அடக்கம் செய்யவும் இறந்தவரின் பாதுகாவலர்களாகிய ஆண்களில் தகப்பன், மற்றும் நெருங்கிய ஆண் உறவினர் களுக்கு முதலிடமுண்டு. அதே போன்று ஒரு பெண்ணின் மையத்தை குளிப்பாட்ட இறந்தவரின் பொறுப்பாளர்களாகிய பெண்களில் தாய், பாட்டி, மற்றும் பெண் உறவினர்களுக்கு முதலிடமுண்டு. தன் கணவனை மனைவியும், மனைவியை கணவனும் கழுவ அனுமதியுண்டு. அபு பக்கர் (ரலி) அவர்களின் உடலை அவருடைய மனைவி கழுவினார். அதே போன்று பாத்தும்மா (ரலி) அவாகள் இறந்த போது அன்னவருடைய உடலை அலி (ரலி) அவர்கள் கழுவினார்கள்.

பாடம் 32

## முஸ்லிம் மையத்துக்கு தொழுவது எப்படி?

மையத்து தொழுகையில் நான்கு தக்பீர்கள் சொல்லப்படும்.

1. முதலாவது தக்பீர் சொன்ன பின்பு சூரா பாதிஹா ஓத வேண்டும். அத்துடன் சிறிய சூரா அல்லது ஓரிரண்டு குர்ஆன் வசனங்கள் ஓதமுடியும் என இப்ன் அப்பாஸ் (ரலி) ஒரு ஹதிஸை ஆதாரம் கொண்டு அறிவிக்கிறார்கள்.

2. இரண்டாவது தக்பீர் கூறிய பின் தஷ்ஷஹுது எனும் ஸலவாத்தை ஓத வேண்டும்.

3. மூன்றாவது தக்பீர் கூறிய பின் இறந்தவருக்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கோரி பிரார்த்திக்க வேண்டும். உதாரணமாக. *'யா அல்லாஹ்! எங்களில் உயிருடன் இருப்பவர்களையும் இறந்தவர்களையும் எங்களில் இங்கு பிரசன்னமாகியவர்களையும், ஆகாதவர்களையும், எங்களில்*

*சிறியவர்களையும், பெரியவர்களையும் நீ மன்னித்தருள்வாயாக. யா அல்லாஹ்! எங்களில் யாரை நீ உயிர் வாழ வைக்கிறாயோ அவர்களை இஸ்லாத்தில் வாழ வைப்பாயாக. எங்களில் யாரை நீ மரிக்க வைக்கிறாயோ அவர்களை இறைவிசுவாசத்துடன் மாளவைப்பாயாக. யா அல்லாஹ்! இவருடைய பாவங்களை மன்னித்து அருள் புரிவாயாக. இவர் மீது கிருபை செய்வாயாக. இவரை சுகப்படுத்துவாயாக. இவருக்கு கருணை புரிவாயாக. இவர் பிரவேசிக்கும் ஸ்தானத்தை விசாலமாக்கி வைப்பாயாக. இவரை மிகப் பரிசுத்தமான புனிதமான தண்ணீராலும், பனியாலும் நீராட்டி அசுத்தங்களை விட்டும் கழுவப்பட்ட வெண்ணிற ஆடையைப் போல் பாவங்களை விட்டும் இவரை தூய்மை படுத்துவாயாக. உலகில் இருந்த இல்லத்தை விட சிறந்த இல்லத்தை இவருக்குக் கொடுப்பாயாக. உலகில் இருந்த குடும்பத்தை விட சிறந்த குடும்பத்தை இவருக்குக் கொடுப்பாயாக. இவரை சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக. கப்ருடைய வேதனைகளிலிருந்தும், நரகநெருப்பின் கொடுமைகளிலிருந்தும் இவரை பாதுகாப்பாயாக. இவருடைய கப்ரை விசாலமாக்கி அதனை இவருக்காக பிரகாசமாக்கி வைப்பாயாக.'*

தொழுகையின் போது இமாமாக நிற்பவர் ஆண் மையத்தின் தலைக்கு நேராகவும், பெண் மையத்தின் இடுப்புக்கு நேராகவும் கிப்லாவை நோக்கி நின்று தொழ வைப்பது முஹம்மது நபி (சல்) அவர்களின் சுன்னாவாகும்.

ஒன்றுக்கு அதிகமான மையத்துகள் இருந்தால் ஆண்களின் மையத்துக்கு அடுத்ததாக பெண்களின் மையத்துகள் வைக்கப்படும். சிறுபிள்ளைகளின் மையத்து இருந்தால் ஆண்களின் மையத்துக்கு அடுத்ததாக சிறிய ஆண் பிள்ளையின் மையத்து வைக்கப்படும். சிறிய பெண்பிள்ளையின் மையத்து இருந்தால் மூத்த பெண்களின் மையத்துக்கு அடுத்ததாக வைக்கப்படும்.

இதன்படி முதலில் ஆண் மையத்தையும் அதனை அடுத்து அவருடைய தலைக்கு நேராக தலை இருக்கும் முறையில் ஆண்பிள்ளையின் மையத்தையும் அதனை அடுத்து ஆணின் தலைக்கு நேராக பெண் மையத்தின் இடுப்பு இருக்கும் முறையில் மூத்த பெண்ணின் மையத்தையும் அதற்குப் பிறகு பெண் மையத்தின் இடுப்புக்கு நேராக இடுப்பு இருக்கும் முறையில் பெண் பிள்ளையின் மையத்தையும் வைக்க வேண்டும்.


இந்த முறையில் எல்லா ஆண் மையத்துகளின் தலைகளும் எல்லா பெண் மையத்துகளின் இடுப்புகளும் இமாமாக நிற்பவருக்கு எதிரில் ஒரே வரிசையில் இருக்கும்.

மையத்து தொழுகைக்காக நிற்பவர்கள் இமாமுக்கு பின்னால் வரிசையாக நிற்க வேண்டும். இமாமுக்கு பின்னால் நிற்க இடமில்லாவிட்டால் இமாமுக்கு வலது புறத்தில் நிற்கலாம்.

----------------------------------

சகல புகழும் ஏக இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன. முஹம்மது நபி (சல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தவர்கள் மீதும் தோழர்கள் மீதும் சலவாத்தும் சலாமும் உண்டாவதாக. ஆமீன்.

இப்புத்தகத்தைப் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களையும், விமர்சனங்களையும் பெரிதும் வரவேற்கிறோம்.



Abdulaziz Al Shomar
Al Haramain Islamic foundation
P.O.Box: 92684
Riyadh – 11663
Kingdom of Saudi Arabia

## References:


1- TRANSLATION OF QUR'AN IN TAMIL - PRINTED by KING FAHD PRINTING COMPLEX.

2- THE MOST IMPORTANT LESSON FOR EVERY MUSLIM (in Arabic) By: Sheik Abdulaziz bin Baz.

3- THE BOOK OF PRAYER Compiled by: Nathif Adam

4- SALAT ACCORDING TO THE MANNERS OF THE PROPHET MUHAMMAD (SAL) By: Sheik Abdulaziz bin Baz.

5- ISLAM IN FOCUS By : Hammudah Abdulati

6- THE MEANING OF THE TESTIMONY OF FAITH "LA ILAHA ILAALALLAH" By : Sheik Hamoud Al-Lahim

7- KITAB AT-TAUHID By: Sheik-ul-Islam, Mohammad bin Abdallah Abdul-Wahab

8- PILLARS OF ISLAM AND IMAN by Sheik Mohammad Bin Jameel Zaino

مكتب الدعوة بالسلي
١٤١ الرياض ١١٤٣١ هاتف : ٢٤١٤٤٨٨ - ٢٤١٠٦١٥ تحويلة ناسوخ ٢٣٢

# ٣٢ درسا مهما يجب أن يعرفها كل مسلم

المؤلف
عبد العزيز الشومر

المترجم
جاسم بن ديان





كتب الجاليات ٥١/٣

ميلي
١٣٠١٠٣٨